
ஈரோடு தந்த வள்ளல்

ஈ. வே. இராமசாமிப் பெரியார்



ஒரு அணா

வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார் இன்பத்தேன் பொழியும் நடையில் எழுதிய தித்திக்கும் புதுமையான நாவல்கள்

		ரூ.	அ.			ரூ.	அ.
1.	திகம்பரசாமி பால்யலீலை	5	0	19.	கலியாணசுந்தரம்	1	2
2.	புஷ்பாங்கி	3	8	20.	நங்கைமடவன்னம்	1	2
3.	மிஸிஸ் லீலா மோகினி	3	0	21.	சிங்கார சூர்யோதயம்	1	3
4.	மன்மதபுரி மூடுமந்திரம்	2	12	22.	பூச்சாண்டி எம்மே!	1	2
5.	கனகாம்புஜம்	2	12	23.	சோமசுந்தரம்	1	2
6.	சுயமரணபுரி மர்மம்	2	8	24.	டாக்டர் சோணாசலம்	1	2
7.	தில்லைநாயகி	2	4	25.	பச்சைக் காளி	1	2
8.	துரைக்கண்ணம்மாள்	2	4	26.	சமயசஞ்சீவி	1	2
9.	சதானந்த சாமியார்	2	4	27.	சொக்கன் செட்டி	1	2
10.	படாடோப சர்மா	2	4	28.	பூஞ்சோலையம்மாள்	1	2
11.	லக்ஷ்மீகாந்தம்	2	0	29.	தங்கம்மாள்	1	2
12.	திரிபுரசுந்தரி	2	0	30.	சிவராமகிருஷ்ணன்	1	2
13.	காந்திமதி	1	12	31.	பிச்சுமுத்துக் கோனான்	1	2
14.	மருங்காபுரிமாயக்கொலை	1	8	32.	பாவாடைச் சாமியார்	1	2
15.	இராஜேந்திர மோகனா	1	4	33.	நவநீதம்	1	2
16.	வசந்த கோகிலம்	1	4	34.	துரைராஜா	1	2
17.	முத்துலக்ஷ்மி	1	4	35.	மாயசுந்தரி	0	12
18.	நீலலோசனி	1	2	36.	திவான் லொடபடசிங்	0	12

குறிப்பு:— ரூபாய் நாற்பது மணி ஆர்டர் செய்தால் மேற்குறித்த 36 நாவல்களையும் வேறுவிதச் செலவின்றி ரயில்வே பார்சல் மூலமாய் அனுப்பி வைக்கப்படும். வெளி நாட்டினர் ரூபாய் 45 மணி ஆர்டர் செய்யவேண்டும். எக் காரணம் கொண்டும் வி. பி. யில் அனுப்பப்படுவதில்லை.

மனோரஞ்சனி ஆபீஸ்

286, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், மதராஸ்

ஈரோடு தந்த வள்ளல்

ஈ. வே. இராமசாமிப் பெரியார்

(பேனா சித்திரம்)

ஆசிரியர்
மயிலைக்கிழார்

மனோரஞ்சனி ஆபீஸ்
286 அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், மதராஸ்

[விலை ஓர் அணா

முன்னுரை

சோம்பேறித் திண்ணை வேதாந்தமும், வாய் வேதாந்தமும் பேசி வீண் பொழுது போக்கி, அர்த்தமற்ற சாதிசமயப் பேதங்களாகிய சகதியில் அழுந்தி, ஊக்கமும் முயற்சியும் தன்மதிப்பும் இன்றி உறங்கிக்கிடந்த தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பிய தமிழ் நாட்டுத் தலைவர்களுள் ஈரோட்டுப் பெரியார் ஈ. வே. இராமசாமி நாயக்கர் தலை சிறந்தவராவார் எனில் மிகையாகாது. தமிழ் நாட்டில் முதன் முதலாக வந்தே மாதரக் கிளர்ச்சியை நடத்தித் தேசீய விதை விதைத்த உயர்திரு-வா. ஒ. சிதம்பரம்பிள்ளை அவர்களுக்குப் பிறகு, தமிழ் நாடெங்கணும் காங்கிரஸ் செய்தியைப் பரப்பி மக்களிடையே சுதந்தர தாக முண்டாகச் செய்தவர்களில் திருவாளர்கள்—திரு. வி. கலியாண சுந்தர முதலியார், டாக்டர் வரதராஜலு நாயுடு, ஈ. வே. இராமசாமி நாயக்கர் ஆகிய மூவரை முதலில் குறிப்பிட வேண்டும். இராப்பகலெனப் பாராது, வெயில் மழை யெனக் கருதாது இடைவிடாது சுற்றுப் பிரயாணஞ் செய்து அம்மும்மூர்த்திகள் செய்த வீரவுணர்ச்சி மிக்க பிரசங்கங்கள்தாம், பின்னர் நடந்த தேசீயப் போராட்டங்களில் எல்லாம் தமிழ் மக்களைப் பங்கெடுத்துக் கொள்ளும் படித் தயார் செய்தன என்பதையும், மாகாண சுயாட்சி வழங்கப்பட்டிருக்கும் இச்சமயத்தில் காங்கிரஸ்காரர்கள் மந்திரி சபையில் இருந்து ஆட்சி செலுத்துவதற்கு மக்களின் பேராதரவை வாங்கித் தந்தன என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

குறிப்பாக, திரு. ஈ. வே. இராமசாமி நாயக்கர் அவர்கள் மகாத்மா காந்தி தொடங்கிய ஒத்துழையாப் போராட்ட காலத்தில் செய்த தேச சேவையை யாரும் இவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட முடியாது. நன்றியறிவுள்ள தமிழ்மகன் அவரது சேவையை என்றும் மறக்கமாட்டான். அதன் பின்னரும் அப்பெரியார் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் புரிந்து வருந் தன்னலமற்ற தொண்டு அளவிடற்கரியது. அவர் காங்கிரஸிலிருந்து விலகியபின், பொதுஜன சேவை செய்யும் விஷயத்தில் கொண்டுள்ள கொள்கைகள், கையாண்டுவரும் வேலைமுறைகள், பேசும் பிரசங்கங்கள் சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனால் அவரது இலட்சியத்தைக் கவனிக்க வேண்டும். அவரது இலட்சியம் மிகச் சிறந்தது; உயர்ந்தது. இலட்சியம் ஒன்றுயிருந்தால் அதை நிறைவேற்றிவைப்பதற்குரிய வேலைத் திட்டங்கள் பலவாயிருப்பதைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. இலட்சியம் உயர்ந்ததாயிருப்பின், வேலை முறை எவ்விதமாயினும் இருக்கலாம். இலட்சியத்தில் காங்கிரஸ் இலட்சியமும் காந்தியடிகள் இலட்சியமும் நமது இராமசாமிப் பெரியார் கொண்டுள்ள இலட்சியமும் ஒன்றேயாகும். இராமசாமிப் பெரியார் கருத்தில் காணப்படும் இலட்சியம் தான், என் மனதை மிகவுங் கவர்ந்து அவர்பால் மதிப்பும் அன்புங் கொள்ளச் செய்தது. சிலர், 'அவர் இலட்சியம் எப்படியோ இருக்கட்டும்; அவரது பேச்சும் செயலும் ஆக்க வேலையைச் செய்வதாயில்லையே! அழிவு வேலையையன்றோ செய்து வருகின்றன! ஆதலால் அவரது இலட்சியத்தை எப்படி பாராட்ட முடியும்?' என்கின்றனர். அவர்களுக்கு

நாம் ஒன்று கூறுவோம். அழிவு வேலைதான் ஆக்கத்தை யுண்டு பண்ணும். சம்மாரத்தி லிருந்துதான் சிருஷ்டி வேலை ஆரம்பமாகிறதென்ற தத்துவத்தை யுணரவேண்டும். பெரியார் அழிவு வேலையை மேற்கொண்டிருக்கிறார் என்பது உண்மை. அதை எதற்காகக் கொண்டிருக்கிறார்? நம் சமூக சமயங்களிலுள்ள ஊழல்களையும் சீர் கேடுகளையும் போக்கி, ஒரு நல்ல நிலைமையை யேற்படுத்திப் புதிய சகாப்தத்தை யுண்டு பண்ணவே யாகும். அவரது குறிக்கோள்படி, நம் தமிழ் நாட்டில் நவயுகம் ஏற்படப் போவது திண்ணம். நாம் மாறுதலடைந்து வரும் ஒரு சகாப்தத்தில் வாழ்ந்து வருகிறோம். இன்றைய நிலைமை புதிய சகாப்தம் ஒன்று தோன்றுவிப்பதற்கு வழியாக இருக்கிறது. அப்புதிய சகாப்தத்தை ஏற்படுத்த போகிறவர் நமது நாயக்கர்தான் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே, மக்கள் சமூகத்தை உன்னத நிலையில் வைக்கவேண்டுமென்ற உயர்ந்த இலட்சியங் கொண்டுள்ள உத்தம புருஷனை—அந்த இலட்சியத்தை நிறைவேற்றி வைக்க அல்லும் பகலும் பாடுபட்டுவரும் தியாகியைப் பாராட்ட வேண்டியது நன்றியறிவுடைய மனிதனது கடமையல்லவா! எனவே, பூதவுடம்போடு புகழுடம்பும் கொண்டு விளங்கும் இராமசாமிப் பெரியாரை எழுத்துருவி லும் பொறித்து வைத்துக் காண வேண்டுமென்று எனக்கு ஆசையேற்பட்டது. அவரது கம்பீர தோற்றத்தை—கவர்ச்சி மிக்க உருவத்தை—அவரது வாழ்க்கை வரலாற்றைப் பேனா சித்திரத்தில் தீட்டி மகிழ்ந்து தமிழ் மக்களிடையே சமர்ப்பிக்க வேண்டுமென்ற ஆவல் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது.

தமிழ் நாட்டில் அறிஞர்கள், புலவர்கள், தலைவர்கள் முதலிய பிரமுகர்களைப்பற்றி—அவர்களது வரலாற்றைக் குறித்து—எழுதுவதென்றால், அதற்குப் போதிய வசதி கிடையாது. அத்துடன் சம்பந்தப் பட்டவர்களுடைய ஒத்துழைப்பும் கிடைப்பதில்லை. நம் நாட்டில் தேச சரித்திரமும், அரசர், புலவர் முதலிய பிரமுகர்களுடைய சரித்திரங்களும் எழுதி வைக்கும் வழக்கமே இதற்குமுன் இருந்ததில்லை. மேனாட்டார் தொடர்பினால் தான் இவ்வழக்கம் சிறிது சிறிதாக ஏற்பட்டுவருகிறது. அப்படியிருந்தும், சரித்திரம் எழுதும் விஷயத்தில் எழுதும் ஆசிரியன் மேனாட்டு முறையை யொட்டி, தன் அபிப்பிராயத்தை நடுவு நிலைமையாகவும் நியாயமான முறையிலும் சொல்வதற்கில்லாத நிலையில்தான் இன்னும் இருந்து வருகிறது. ஏதோ ஒரு சார்பில் நின்றே எழுத வேண்டி யிருக்கிறது. இதற்கு முக்கிய காரணமென்ன வென்றால், நம்மக்கள் அபிப்பிராய பேதத்துக்குத் தாராளமாக இடங்கொடுக்காமலிருந்து வருவதேயாகும். இக்கருத்து வேற்றுமைக்குப் பயந்தே தேசத்தலைவர்களும், அறிஞர்களும் தங்கள் வரலாறுகளை, எழுதுவோர் விருப்பத்துக் கிணங்கத் தெரிவிக்கத் தயங்குகின்றனர். ஆனால், இராமசாமிப் பெரியார் கருத்து வேற்றுமையைத் தாராளமாக வரவேற்பவராதலால், அவரது வரலாற்றைப்பற்றி—அவரது கொள்கை, வேலை முறைகளைப்பற்றி—உள்ளபடி எழுதி வெளிவருவதை மறுக்கமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனால், நான் அவரது சரித்திரத்தை எழுத விரும்பி, வாழ்க்கைக் குறிப்புகளைத் தரும்படி எழுதிக் கேட்கக் கருதிய சமயத்தில், அவர் கட்டாய

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி சம்பந்தமாகச் சிறை புகுந்தார். ஆகவே, எனது எண்ணத்தை யுடனே முடிக்க முடியாமற் போயிற்று. இதனிடையே ஒருநாள் தற்போது பெரியாரின் ஆப்த நண்பர்களுள் ஒருவரான திருச்சி. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்க நேர்ந்தது. அச்சமயம் அவரிடம் எனது எண்ணத்தைத் தெரிவித்து, பெரியாரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் ஏதாயினுங் தெரிந்தால் கூறமுடியுமா? என்று கேட்டேன். அதற்கு அவர் தமக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது என்றும், நினைவுமில்லை யென்றும், ஊருக்குப்போய், தோழர்களையும் விசாரித்து தகவல்களைச் சேகரித்து அனுப்புவதாகவும் உறுதி கூறிச் சென்றார். ஆனல், இயக்க வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததன் காரணமாகவோ அல்லது மறதியாலோ, அவர் கூறியபடி ஒன்றும் எழுதியனுப்பவில்லை. இதற்குப்பின், திருச்சியிலேயே ஒரு தமிழ்த் தொண்டரும், சென்னைத் தோழரொருவரும் பெரியாரைப்பற்றி நூல்கள் வெளியிட்டிருக்கின்றனர். ஆனல், நான் எதிர்பார்த்தபடி நோக்கம் நிறைவேற்றப்படவில்லை யாதலால், என் முயற்சியைத் தளரவிடாது, பெரியாரைப் பற்றிப் பல குறிப்புகளையும் சிரமப்பட்டுச் சேகரித்து ஒருவாறு இந்நூலை வெளியிட்டிருக்கிறேன். பெரியார் உடல் நலமின்மை காரணமாகச் சிறையிலிருந்து விடுதலையானதும், அதன்பின் சர்க்கார் உத்தரவால் இந்தி எதிர்ப்பாளர்கள் சிறையிலிருந்து விடுதலை யடைந்ததும், இந்நூல் வெளிவருவதும் ஏறக்குறைய ஒத்திருப்பதால், பெரியார்தம் அறுபதாவது வயதுக்குமேலும் எட்டாவது முறையாகச் சிறை செல்ல

நேர்ந்து, குறிப்பிட்ட காலம் முடிவதற்குள்ளாகவே, விடுதலையானதை நினைந்து மகிழ்தற்கு அறிகுறியான ஒரு நினைவு மலராக இச்சிறு நூலை மதிக்க வேண்டுகிறேன். அவ்வகையில், எனது நோக்கத்தை மதித்து, தமிழ் மக்கள் இச்சிறு நூலை வரவேற்பார்களென்ற கருத்துடன், இதை அவர்களிடையே சமர்ப்பிக்கிறேன்.

ஆசிரியன்

ஈரோடு தந்த வள்ளல்

ஈ. வே. இராமசாமிப் பெரியார்

1. அவர் யார் ?

ஈரோடு நாயக்கரா? அவர் யார்? இராமசாமி நாய்க்கர்—ஈ. வே. இராமசாமி நாயக்கர்—ஈ. வே. ரா.—பெரியார் ஈ. வே. ரா.—இராமசாமிப் பெரியார்—என்றெல்லாம் கூறுகிருர்களே! அவரா? ஆம். அவர்தான். அவரேதான். முதலில் சாதாரண மளிகைக் கடை ஈரோடு நாயக்கராயிருந்து—காங்கிரஸ் நாயக்கராகி — பிறகு சுயமரியாதை நாயக்கராகி—ஜஸ்டிஸ் கட்சித் தலைவராய்—இப்போது தனித் தமிழ்ப் பெரியாராய் இருந்துவரும் அதே ஈரோடு இராமசாமி நாயக்கர்தான். அப் பெரியாரைப்பற்றித் தான் இங்கு குறிப்பிடுகிறோம். முதன் முதலாக, காங்கிரஸில் சேர்ந்து தேச சேவை செய்யத் தொடங்கியதிலிருந்து, ஜஸ்டிஸ் கட்சித் தலைவராயிருக்கும் இன்று வரை பெரும்பாலும் அவரது நண்பர்களாலும் பொது மக்களாலும் அவர் ஈரோடு நாயக்கர் என்றே அருமையாக அழைக்கப்பட்டு வந்திருக்கிருர். ஈரோட்டில் இவரைப்போன்று எத்தனையோ நாயக்கர்கள் இருக்கலாம். ஆனாலும், ஈரோடு நாயக்கர் என்ற சொல் சிறப்பாக நமது இராமசாமி நாயக்கரையே குறிப்பிடும்; போய்ச்சேரும். அவ்வளவு ஏன்? இன்று தமிழ் நாட்டில் நாயக்கர் என்று சொல்லப்பட்டாலே, சுயமரி

யாதை இயக்கத் தோன்றலாகிய பெரியார் ஈ. வே. இராம சாமி நாயக்கரே நம் நினைவிற்கு வருவார்.—அவரது கம்பீர தோற்றமுடைய உருவமே நம் கண்முன் வந்து நிற்கும். அவரது பெயர் அவ்வளவு தூரம் நமது தமிழ் மக்களது உள்ளங்களி னிடையே ஆழ்ந்து பதிந்து போயிருக்கிறது. அவர் பொது வாழ்வில் ஈடுபட்டது முதல் இன்றுவரை செய்து வந்த—செய்து வருகிற—செய்துவரும்—ஒவ்வொரு செயலும், அவர் பேசும் ஒவ்வொரு பேச்சும் அவரை எளிதில் மறக்க முடியாதபடி, அவரை என்றும் நினைவில் வைக்கும்படி செய்து வருகின்றன. அவரது பேச்சும் செயலும் ஒவ்வொன்றும் அவ்வளவுதூரம் வெகு உத்வேக முடையதும் புரட்சிகரமானதுமாகும்.

ஈரோடு நாயக்கர்—ஈரோடு இராமசாமி நாயக்கர் என்றவுடனே, "இராமசாமி நாயக்கரா? அப்பா! அவரா? அவர் பக்கா நாஸ்திகரன்னு! பிராம்மண துவேஷியன்னு! ...." என்று கூறிப் பெருமூச்சு விடுகிறார் வைதிகப் பிராம்மணர்.

"என்ன! ஈரோடு இராமசாமி நாயக்கரைத்தானே சொல்கிறீர்கள்? முன்னர் அவர் எவ்வளவுக் கெவ்வளவு தேசபக்தராயிருந்து தேச சேவை செய்தாரோ அவ்வளவுக் கவ்வளவு இப்போது தேசத் துரோகியாகவல்லவா, சார், ஆகிவிட்டார்? அவர் காங்கிரஸை மட்டுமல்ல; காந்திஜீயைக்கூட வல்லவா வசை பாட ஆரம்பித்துவிட்டார்? நம் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களை மட்டுமல்ல; காங்கிரஸையே; மகாத்மா காந்திஜீ உட்பட எல்லா தேசியத்தலைவர்களையுமே அல்லவா தாக்கிப் பேசியும் எழுதியும்

வருகிறார்? அவர் காங்கிரஸையும், காந்திஜீயையும் திட்டாத நாளே கிடையாதே! என்ன சார்! இருந்திருந்தும் மனுஷன் இப்படிக் கெட்டுப்போய் விட்டாரே?" என்று அங்கலாய்க்கிறார் தேசிய வாதி.

"என்ன அநியாயங்க இது! மேல் வரப்பு கீழ் வரப்பு என்று இல்லையாமே! பார்ப்பான் பறையன்னு—முதலியார் பிள்ளை மற்றவங்கன்னு வித்தியாசமே கிடையாதாமே! எல்லாம் ஒன்னுன்னு பிரசாரஞ் செய்யறாராமே, யாரோ ஈரோட்டுக்காரராம்; இராமசாமி நாயக்கருன்னு பேராம். அது எப்படிங்க சரி; நம்ம பெரியவங்க தெரியாமலா இன்னின்னான் இன்னின்ன ஜாதின்னு பிரிச்சி வைச்சாங்க? புராணங்களி லெல்லாங்கூட எழுதி வைச்சிருக்குதுங்களே! அதைப்போய் இல்லேன்னா,—மேல்சாதி, கீழ்சாதி இன்னு இல்லேன்னா—ஒருத்தனை ஒருத்தன் மதிப்பானுங்களா? கலிகாலத்திலே என்னென்னமோ நடக்குமின்னு சாஸ்திரத்திலே எழுதி வைச்சிருக்கே; அது சரியா போச்சுங்க..............." என்று ஜாதி புராணம் பாடி அலறுகிறார் ஜாதீயவாதி.

பரம பக்தர் கோஷ்டியைச் சேர்ந்தவரோ, "இந்த அக்கிரமம் எந்த உலகத்துக்கு அடுக்கும்? கடவுள் இல்லை; சாமி இல்லை என்று கூடச் சொல்லி மக்களைக் கெடுக்க ஒரு கூட்டம் புறப்பட்டு விட்டதாமே! ஐதீகம்; வைதீகம்; சடங்கு கிடங்கு, தேர் திருவிழா, மதச்சின்னம் என்று ஒன்றுங் கிடையாதெனக் கூறும் அந்த நாஸ்திகக் கூட்டத்துக்குக் குரு—தலைவர்—யாரோ இராமசாமி நாயக்கர் என்பவராம். அவர், 'கடவுளைப்பற்றிக் கவலையில்லை. சாமி, பூதம் என்று கும்பிடும் கல்லை நான் துணி துவைக்க

உபயோகிப்பேன் என்று கூறுகிறாராமே, சாமி! அவர் துணிச்சலை என்னென்பது! இவர் இரணியன், இரணியா க்ஷன் முதலியவர்களைக்கூட இவ்விஷயத்தில் தோற் கடித்து விடுவார்போலிருக்கிறதே! இப்பேர்ப்பட்ட பரம நாஸ்திகர் தன் பெயரைமட்டும் ஸ்ரீ ராமச்சந்திர பிரபு வின் திருநாமமாகிய இராமசாமி என்று ஏன் வைத்துக் கொண்டார் சாமி! அந்த நாஸ்திகர் பெயரை நாவினால் உச்சரித்தால் கூட தோஷமேற்பட்டுவிடும். இவருக்கு ரௌரவாதி நரகந்தான்—அதைவிட பயங்கரமான தனி நரகம்தான்—கிடைக்கும்........................" என்று மனந் துடித்து சபிக்கிறார்.

செல்வத்திலும் செல்வாக்கிலும் அழுந்தி உலக சுக போகங்களை ஒன்றுவிடாது தாங்களே அநுபவிக்க வேண் டும் என்று கருதி ஏகபோகமாக அநுபவித்து வருகிற சுய நலக் கூட்டத்தைச் சேர்ந்தவரோ, "ஏழை—பணக்காரன் என்று இல்லையாம்; ஜமீன்தார்—குடியானவன் என்று கிடையாதாம்; முதலாளி—தொழிலாளி என்பதே மோச மாம். 'இவ்விதப் பிரிவெல்லாம் கூடாது; எல்லாரும் சமத்து வமாய் சம உரிமைகளை அநுபவிக்கவேண்டும்; தனியுடை மையென்று இருப்பதே தவறு; உலகிலுள்ள எல்லாப் பொருளும் எல்லா மக்களுக்கும் பொதுவுடைமையாக இருக்கவேண்டும்; பொதுவாக எல்லாரும் அநுபவிக்க வேண்டும்' என்று கூறிப் பிரசாரஞ் செய்ய இந்த இராம சாமி நாயக்கர் யார்? இவருக்கு இந்த நெஞ்சுத் துணிவு எங்கிருந்து வந்தது? இவரது சோவியத் பொதுவுடைமைப் பிரசாரம் எங்களிடமா செல்லும்? ஹும்; பார்க்கிறோம் ஒரு கை" என்று கறுவுகின்றனர்.

"சாதிப்பிரிவு கூடாது; மதபேதம் வேண்டாம் என்று இராமசாமி நாயக்கர் கூறுவதெல்லாம் சரிதான்; அவரது சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் கூட நம் சமூகத்தில் மலிந்து கிடக்கும் சீர் கேடுகளைப் போக்கிச் சீர்திருத்தஞ் செய்து உயர்வடைய வைப்பதற்கு ஏற்றவைதான். ஆனால், அவர் பேசுந் தோரணையும், கடைப்பிடிக்கும் முறையுந்தான் ஆக்கத்தை யுண்டுபண்ணுவதா யில்லை. அவரது வேலையே அழிவு வேலைதான். ஆதலால் தான், நாம் அவரது கொள்கைகளையும் பிரசங்கங்களையும் ஏற்றுக் கொள்ள முடியாம லிருக்கிறது" என்கிறார் சமூக சீர் திருத்தவாதி.

"தோழர் ஈ. வே. ரா. எங்கள் இணையற்ற தலைவர். பெரியார்-உலகப் பெரியார்-அதுமட்டுமா! சர்வ தேசங்களிலும் அவரைப்போன்ற தலைவரையும், பெரியாரையும் அரசியல் நிபுணரையும் காணுதல் அரிது. தமிழர்களிடையே சுயமரியாதையை யுண்டாக்கினார். பணக்காரர், மேல் ஜாதியார் என்ற கொட்டத்தை யடக்கிச் சம தர்மம் போதிக்கும் வீரர். அத்தகைய தோழர் ஈ. வே. ரா. வாழ்க! ஈ. வே. ராமசாமிப்பெரியார் வாழ்க!" என்று வாழ்த்துகின்றனர் மாறுதல் வேண்டும் தீவிர இளைஞர்களும், சுயமரியாதைக்காரர்களும்.

இவ்விதம் ஒரு சாரார் தூற்றவும் மற்றொரு சாரார் போற்றவும் நிற்கும் இந்த விசித்திர மனிதர் யார்? இவரது நோக்கம்—இலட்சியம்தான் என்ன? இவரால் நம் நாட்டுக்கு—மக்களுக்கு—நன்மை யேற்படுமா? இவர் இளைஞர் உலகம்—வருங்கால உலகம்—பின்பற்றுதற்குரிய ஆதர்ச புருஷர்தானா? அல்லது இவர் தமிழ் நாட்டுக்கே—

மக்கள் சமூகத்துக்கே—அருகதையற்றவரா? மக்களுக்கு வழிகாட்டக்கூடிய தலைவர்தானா? தமிழ் நாட்டுத் தலைமை பதவி ஏற்பதற்குரிய தகுதியுடையவர்தானா? அல்லது தகுதியற்றவரென ஒதுக்கித் தள்ளக்கூடியவரா? என்ற வினாக்கள் பொது நோக்குடைய ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுவது இயற்கையே. இவற்றிற்கெல்லாம் தகுந்த பதில்கள் பெறவேண்டுமானால் அவரது வாழ்க்கை வரலாற்றை—அவர் பொது வாழ்வில் புகுந்த பின்னர் இதுவரை செய்துள்ள வேலைகளும் புரிந்துள்ள பிரசங்கங்களும் ஆகியவற்றைக் கூர்ந்து நோக்குவது — ஆராய்வது அவசியம்.

---

2. சீர்திருத்தமா? அழிவு வேலையா?

ஈரோடு இராமசாமி நாயக்கரைப்பற்றி நான் முதன் முதலாகக் கேள்விப்பட்டது 1925-வது ஆண்டில் செங்கற்பட்டில் நடைபெற்ற முதலாவது சுயமரியாதை மகாநாட்டின் போது தான். அப்போது எனக்கு உலக விவகாரம் அவ்வளவாகத் தெரியாத காலம்; பள்ளியில் படித்துக் கொண்டிருந்த பருவம். அச்சமயம் சுற்றுப்புறத்திலுள்ளார், பெரியவர்கள் பரபரப்புடன் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரைப் பற்றிப் பலவிதமாக பேசிக்கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். அதற்குமுன் மகாத்மா காந்தியைப் பற்றித்தான் முதியோர், இளைஞர், ஆண், பெண் அனைவரும் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். அவருக்கு அடுத்தபடியாக, இவ்வளவு பரபரப்போடும், ஆச்சரியத்தோடும் பேசப்படும் இம் மனிதர் யார்? அவர் எப்படி யிருப்பார்? அவர் எவ்விதம் பேசுவார்? அவர்

என்ன செய்கிறார் ?' என்றெல்லாம் என் மனம் என்னையே கேட்டது. எனவே, நான் அவரை நேரில் பார்க்க—அவர் பேச்சைக் கேட்க—அவரைப்பற்றி அதிகமாக அறிய—ஆசைகொண்டேன். என் ஆவலை ஓரளவு சாந்தி செய்வதற்குரிய ஒரு சந்தர்ப்பமும் வாய்த்தது.

1928-ம் வருஷம் நவம்பர் மாதம் 26-ந்தேதியன்று சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் ஈரோடு இராமசாமி நாயக்கரை முதன் முதலாகக் கண்டேன். 26, 27-ந் தேதிகளில் தென் இந்தியா சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு ஒன்று நடைபெற்றது. அம்மகாநாட்டுக்கு நமது இராமசாமிப் பெரியார்தான் தலைவர். அச்சமயம் அவர் முரட்டுக் கதர் வேஷ்டி யொன்றையும், நீளக் கதர்ஜுப்பா வொன்றையுந் தரித்து, கதர் சால்வை யொன்றை மேலே போர்த்துக் கொண்டிருந்தார். வெள்ளிக்கம்பி போன்ற சுருண்ட தலைமயிரும், நீளமான பெரிய மீசையும் அவரது கம்பீர தோற்றத்தையும் வீரத்தையும் விளக்கக் கூடியதாயிருந்தன. சரியான உயரம்; சற்றுப் பருத்த தேகம்; சிவந்தமேனி; திரண்டதோள்கள்; பரந்த மார்பு இவைகள் இவர் ஒரு பெரிய இயக்கத்தை நடத்திச் செல்லக்கூடிய தலைவர் பதவிக்குத் தகுதிவாய்ந்தவர் என்பதைத் தெரிவித்தன. அவர் எழுந்து நின்று பேசத்தொடங்கினார்.

" சகோதரிகளே ! சகோதரர்களே !!

இந்தப் பெரியதும் முக்கியமானதுமான மகாநாட்டிற்கு என்னைத் தலைவனாகத் தெரிந்தெடுத்ததன் மூலம் தாங்கள் எனக்களித்த கௌரவத்திற்காக எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தங்கள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இம் மகாநாடு சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு என்று சொல்லப்படுகிறது. எனவே, இத்தகைய ஒரு மகாநாட்டிற்குச் சீர்திருத்தத்தில் மிகுதியும் நம்பிக்கையுள்ள ஒருவரைத் தலைவராகத் தெரிந்தெடுத்திருப்பீர்களானால் அது மிகவும் பொருத்தமுடையதாக இருந்திருக்கும் என்று நான் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில் வரவர எனக்குச் சீர்திருத்தம் என்பதில் உள்ள நம்பிக்கை மறைந்து கொண்டே போகின்றது. அன்றியும் நமது நாட்டை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்பவர்களுக்கும் நமது நாட்டுப் பெரும்பான்மையான மக்களுக்குச் சுயமரியாதையும், சமத்துவமும், விடுதலையும் உண்டாக்கச் செய்யவேண்டும் என்பவர்களுக்கும் எதிரில் இருக்கும் வேலை சீர்திருத்த வேலை அல்ல என்பதே எனது அபிப்பிராயம். மற்று என்னையெனில், உறுதியும் தைரியமும் கொண்ட அழிவு வேலையே ஆகும். அளவுக்கு மீறின பொறுமை கொண்ட யோசனையின்மீதே நான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறேன்..............."

இவ்விதம் எடுத்த எடுப்பிலேயே—தலைமையுரையின் பீடிகையிலேயே—இராமசாமிப் பெரியார் தமது மிகப் புரட்சிகரமான கொள்கையை வெடி குண்டு எறிவது போல் வெளியிட்டது எனக்குத் தூக்கி வாரிப்போட்டது போலிருந்தது. ஆனால், அவர் தாம் அழிவு வேலையை மேற்கொள்ளும் முடிவுக்கு வர நேர்ந்ததற்குரிய காரணத்தைக் கூறியது எனக்குப் பொருத்தமாகக் காணப்பட்டது.

அப்பிரசங்கத்தில் என் கருத்தை முற்றுங் கவர்ந்த பகுதிகள் பின் வருவனவாகும்:—

"நமக்குள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் சீர்திருத்தம் பொது மனித சமூகத்தில் மக்களின் பிறப்பின் காரணமாக உயர்வு தாழ்வு கற்பிப்பதாகும். இந்த முறை நமது இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு மோசமான கற்பனையின் மீது கையாளப்படுவதே இல்லை. அடுத்தபடியானது வாழ்க்கையில் இருந்துவரும் பழக்கவழக்கம், மூடபக்தி, குருட்டு நம்பிக்கை ஆகியது போன்றவைகள். இவைகள் எல்லாம் நமது நாட்டில் விசேஷமாய் மதம், கடவுள், மோட்சம் என்பதின் பெயர்களாலேயே அவைகளை ஆதாரமாய் வைத்தே நடைபெற்று வருகின்றது. என்றாலும், இவைகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்கிற கவலை வெகு காலத்திற்கு முன்னதாகவே ஏற்பட்டது என்று சொல்லலாம். அதாவது புத்தர், இராமானுஜர், திருவள்ளுவர் முதலிய பல பெரியோர்கள் காலத்திலேயே ஏற்பட்டதாகச் சொல்லலாம். ஆனாலும் மேற்கண்ட துறைகளில் அதுமுதல் இதுவரை ஒரு சிறு காரியத்திலாவது வெற்றி ஏற்பட்டு அது நமக்குப் பயன்பட்டது என்று சொல்லுவதற்கு இல்லை. இப்போது ஏதாவது ஒரு சிறிதளவு மாறுதல் ஏற்பட்டு இருக்கின்றது என்று யாராவது சொல்ல வருவார்களானால், அது வெளிநாடுகளில் நடைபெறும் சமூக சீர்திருத்தத்தின் சாரல் அல்லது வெளிநாட்டார் தங்கள் சுயநலத்துக்காகச் செய்யப்பட்ட வேலைகளின் பலன் என்றுதான் சொல்லவேண்டும்.

"நம் நாட்டில் நம் நாட்டு மக்களால் சமூக சீர்திருத்தம் என்பது ஒரு சிறிதும் செய்வதற்குச் சாத்தியமே இல்லை. ஏனெனில் அவற்றிற்குத் தடையாய் கடவுள் உணர்ச்சியையும் மத உணர்ச்சியையுமே நிறுத்தப்பட்டு இருப்பதால் முடியாததாய் இருக்கிறது. அன்றியும் இந்நிலை சிலருக்குப் பயன்படுவே

தாயு மிருக்கின்றது. இதுவரை செய்து வந்துள்ள காரியங்கள் எல்லாம் பயன்படாமல் போனதற்குக் காரணமே இதுதான் என்று சொல்லுவேன்.

“இதற்குச் சமாதானம் சொல்ல வேண்டியவைகள் எல்லாம் சொல்லியாய்விட்டது. செய்ய வேண்டியவைகள் எல்லாம் செய்து ஆய்விட்டது. அதாவது புத்தர், கபிலர், திருவள்ளுவர் முதலியவர்கள் சொன்னவைகளுக்கு மேலாகவும், இராமாநுஜர் செய்ததற்கு மேலாகவும் இனி ஒருவர் வந்து புதிய ஞானத்தைப் போதித்தோ புதிய காரியத்தைச் செய்தோ விடமுடியும் என்பது இலேசான காரியம் அல்ல. அன்றியும் சமூக சீர்திருத்தத்திற்கு இப்போது விரோதிகளா யிருப்பவர்களும் கூட தங்களுடைய தடை வேலையில் நம்பிக்கை வைத்திருப்பதின் காரணமும் இதுவேதான். ஆனாலும், அப்போதைய நிலைமையும் சௌகரியமும் அரசாங்கமும் வேறு; இப்போதைய நிலைமையும், சௌகரியமும் அரசாங்கமும் வேறு என்பதான ஒரு சிறிய திருப்தி சமூக சீர்திருத்தக்காரர்களுக்கு நம்பிக்கை கொடுக்கக் கூடியதாயிருந்தாலும், கடவுள் உணர்ச்சியும் மத உணர்ச்சியும் ஒரு சிறிதும் மாறுபாடடையாமல் இருப்பதால் இந்த நிலையில் நமது நாட்டுச் சமுதாயத்திற்குச் சீர்திருத்தம் என்பது முடியாத காரியம் என்றே முடிவுகட்ட வேண்டியிருக்கிறது. ஏனெனில், இந்த இரண்டையுமே மனிதனின் மூடபக்தியும் குருட்டு நம்பிக்கையும் என்கிற அஸ்திவாரத்தின் மீதே கட்டப்பட்டிருக்கிறது. ஏனெனில், குருட்டு நம்பிக்கையின் பயனாய் ஏற்பட்ட கடவுளினிடத்தில்தான் பெரிதும் மூடபக்தியால் ஏற்பட்ட மதத்தின் மூலம் கொள்கைகளை வகுத்து வாழ்க்கை நடத்துகிறோம். இம் மூட பக்தியையும் குருட்டு நம்பிக்கையையும் ஒழிக்கவேண்டும் என்று சொல்வது சீர்திருத்த வேலையின்பாற் பட்டதல்ல; அது மனித சமூகத்தின் நன்மைக்காக அழிக்கப்படவேண்டிய வேலையின்பாற் பட்டதாகும். ஏனெனில் அடி

யோடு அழித்து தரைமட்டமாக்கி புதுப்பிக்கவேண்டி இருக்கும் வேலை சீர்திருத்த வேலையாகாது. வேண்டுமானால், புனருத்தாரண வேலை என்று சொல்லலாம்.

"...........எந்தக் காரணங்களால் உண்மையான சீர்திருத்தம் வெற்றி பெறவில்லையோ, என்ன என்ன சாதனங்கள் அச்சீர்திருத்தத்திற்குத் தடையோ அவைகளை வேருடன் அழிக்கத் தயாராயிருக்க வேண்டும். அவைகளில் ஒரு சிறு தூரையாவது, கிளை வேரையாவது மீத்தி வைத்துக்கொண்டு சீர்திருத்தஞ் செய்யலாம் என்று. எந்த விதமான சீர்திருத்தக்காரர்கள் நினைத்தாலும் அவர்கள் ஒருக்காலமும் வெற்றி பெறமாட்டார்கள் என்பது எனது உறுதி."

* * *

"அன்றியும் சிலர் சீர்திருத்தம் செய்வதன் மூலம் பழைய சின்னங்களையும், ஓவியங்களையும், கலைகளையும் அழித்து விடாதீர்கள் என்கின்றார்கள். இந்தக் கூட்டத்தார்கள் எந்தப் பழைய சின்னம், ஓவியம், கலை முதலியவைகளை மனதில் நினைத்துக் கொண்டு சொல்லுகிறார்களென்று நான் கண்ணியமாய் நினைக்கின்றேனோ, அந்தச் சின்னமும், ஓவியமும், கலைகளுமேதான் நம்மையும், நம் மக்களையும், நமது நாட்டையும் பாழாக்கியதுடன் ஒவ்வொரு அறிவாளி மனதிலும் சமுதாய சீர்திருத்தம் செய்து தீரவேண்டும்; இல்லாவிடில், வேறு எந்த விதத்திலும் நமக்கு கதிமோக்ஷம் இல்லை என்கிற நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது."

* * *

"கடவுளைப்பற்றி இங்கு நான் அதிகமாகப் பேச வரவில்லை. அதைப்பற்றி எவ்வளவு குறைவாகப் பேசுகிறோமோ அவ்வளவும் நல்லதென்றே சொல்லுவேன் .... கடவுள் என்பது வீண் தர்க்கத்திற்கேற்ற பேச்சே ஒழிய, காரியத்திற்கேற்ற பேச்சல்ல. இதுவரையில் வாதஞ் செய்தவர்கள் கண்ட

முடிவுகளில் மிகவும் முக்கியமானது நமது கண்ணுக்கும், மனதிற்கும், அறிவின் உணர்ச்சிக்கும் எட்டாத ஏதோவொன்று இருக்கின்றது என்றும், அதிலும் தேர்ந்த முடிவாக நம்பினால் தான் உண்டு என்றும் சொல்லும்படியானதுகளே ஆகும். இதற்காக மனதிற்கும் கண்ணுக்கும் அறிவுக்கும் எட்டாத ஒன்றை ஏற்றுக்கொண்டு தக்க ஆதாரம் இல்லாவிட்டாலும் நம்பித்தான் ஆகவேண்டும். நாம் யாரைத் தொந்திரவு செய்வது? அல்லது அம்மாதிரியான தொந்திரவினால் யாருக்குத்தான் என்ன லாபம்?"

* * *

"அடுத்தாற்போல் மதம் என்பதைப்பற்றியோ என்றால் அது ஒரு பொருளற்ற தன்மையது. என்னவெனில், இதுவரை மதமானது உலகத்திற்கு எவ்விதமான பலனையும் கொடுத்திருப்பதாய் விளங்கவில்லை. எந்த மதக்காரனுக்காவது ஒரு சாந்தி ஏற்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை. ஆனால் மதச் சண்டைக்கும், மதப்பிரசாரத்திற்கும் குறைவில்லை........

"மதம் என்பது மனித வாழ்க்கைக்கான கொள்கைகளை வகுத்து அந்தந்த நாட்டு நிலைமைக்குத் தக்கபடி ஏற்படுத்தப்பட்டது அல்லது வகுக்கப்பட்டது என்று சொல்வதானால் ஒருவாறு அதைப்பற்றி யோசிக்கலாம். அதுவும் அந்தந்த கால நிலைமைக்குத் தக்கபடி கொள்கைகளை மாற்றிக்கொள்ளக்கூடிய தன்மையை உடையது என்பதானால் மாத்திரம்தான் மதத்தைப்பற்றி யோசிக்கலாம். அப்படிக்கில்லாமல் மாற்றமுடியாதது; கடவுளின் மகனோ, தூதனோ, அவதாரமோ சொன்னது, கடவுள் தன்மை பொருந்தியது; அதனருகில் வேறு யாரும் நெருங்கக்கூடாது என்று சொல்வார்களானால் அந்த மதங்களை மதங்களாகவே (ஆணவம்) கருதி அவற்றை ஒழிக்க முயற்சிக்க வேண்டியது சமுதாய சீர்திருத்தக்காரர்களின் முக்கிய கடமைகளில் முதன்மையான கடமையாகும். ஏனெனில் சமுதாய

சீர்திருத்தம் என்பது காலத்திற்கு ஏற்றவண்ணம் மாறுபாடுகளைச் செய்ய ஒப்புக்கொள்ளுவதே யாகும். எனவே, அத்தகையவர்கள் முன்னால் எக்காலத்திலும் எந்த நிலையிலும் மாற்றப்படக் கூடாது என்கின்றதான மதத் தடைகள் வந்து குறுக்கிடுமானால் எந்தவிதத்தில் அவற்றை வலம் வந்து வணங்கிக்கொண்டிருக்க முடியும்? கொஞ்சமும் கலங்காது உறுதியுடனும் தைரியத்துடனும் தகர்த்தெறிய எவன் முன்னுக்கு வருகின்றானோ அவன்தான் சமுதாய சீர்திருத்தத் துறையை அணுக முடியும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்."

* * *

"உலகத்தில் சிறப்பாக நமது நாட்டில் எல்லாவற்றையும் விட பெண்கள் நிலையே மிக மோசமானது. அதிலும் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் பதிவிரதத் தன்மையை நினைக்கும் போது மனம் குமுறுகின்றது. அதாவது பதிவிரதம் என்கிற கற்புதான் அவர்களுடைய கடமையாம்........... பெண்களை அடிமைகளாக்கியதன் பலனாய் மக்கள் அடிமைகளால் வளர்க்கப்பட்டார்கள். அடிமைகளால் வளர்க்கப்பட்டதன் பலனாய் மக்கள் சகலத்திற்கும் அடிமைகளானார்கள். எனவே, மக்கள் அடிமைத் தொழிலினின்றும் நீங்கவேண்டுமானால் பெண்கள் அடிமை நீங்கவேண்டும். பெண்கள் அடிமை நீங்கவேண்டும். முக்காலமும் பெண்கள் அடிமை நீங்கவேண்டும்.

"பெண்கள் அடிமை நீங்கவேண்டுமானால் முதலாவதாக அவர்களைக் கற்பு என்னும் சங்கிலியில் கட்டிப் போட்டிருக்கும் கட்டை உடைத்தெறிய வேண்டும்; கட்டுப்பாட்டிற்காகவும், நிர்ப்பந்தத்திற்காகவும் கற்பு ஒருக்காலமும் கூடாது! கூடாது!! கூடவே கூடாது!!! வாழ்க்கை—ஒப்பந்தத்திற்காகவும், காதல்-அன்பிற்காகவும் இருவர்களையும் கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு வேண்டுமானாலும் இறுக்கிக் கட்டப்படட்டும். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கின்ற

கற்பு அடிமைப்படுத்துவதில் ஆசைகொண்ட மூர்க்கத்தனமே அல்லாமல் அதில் கடுகளவு யோக்கியமும் பொறுப்பும் இல்லை............

"ஜீவ சுபாவத்திற்கே பொருந்தாததான ஒரு நிபந்தனையை நமது சகோதரிகள்மீது சுமத்திக் கொடுமைப்படுத்துவதான விதவைத்தன்மை என்பது எந்த விதத்திலாவது பொருத்தமுடையதா என்பதை ஆலோசித்துப் பாருங்கள். இந்நிலை பெண்களை அடிமைகளாய் நடத்துகின்றோம் என்பது மாத்திரமல்லாமல் நம்மைப்போன்ற மனித ஜீவன்களிடத்தில் நாம் எவ்வளவு கொடுமையாய் அறிவீனமாய் நடந்துகொள்ளும் சுபாவமுடையவர்களாய் இருக்கிறோம் என்பதற்கு அறிகுறியாகும்."

* * *

"ஜாதி வித்தியாசம் என்பது கற்பிக்கப்பட்டதே ஒழிய வேறில்லை. வலுத்தவன் இளைத்தவனை அடக்கி வைப்பது என்பதற்கு ருஜு ஜாதி வித்தியாசமே ஆகும். இது இன்னும் நிலைத்திருப்பது என்றால் இந்த நாடு மிருகப் பிராயத்தில் இருந்து மனிதப் பிராயத்திற்கு இன்னமும் வரவில்லை என்பதைத்தான் காட்டுகின்றது. எதற்காக ஒரு மனிதன் உயர்ந்த ஜாதியாகவும், மற்றொரு மனிதன் தாழ்ந்த ஜாதியாகவும் கருதப்படுகிறான் என்பதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கின்றதா? பிறவியிலாவது வாழ்க்கையிலாவது ஒழுக்கங்களிலாவது வித்தியாசங்கள் காணப்படுகின்றதா? ஒன்றுமே இல்லையே. அப்படி ஏதாவது ஒரு வழியில் பிரித்திருந்தாலும் அதற்குச் சமாதானமாவது சொல்ல முயற்சிக்கலாம். ஒரு காரணமும் இல்லாமல் பிறவி மாத்திரத்தில் எதேச்சாதிகாரமாய்ச் செய்யப்படும் கொடுமையாகத்தானே விளங்குகின்றது. இந்த முறை மக்களின் ஒழுக்கத்திற்கே நேர்விரோதமாக இருக்கவில்லையா?

"சகோதரர்களே! இந்தக் கொடுமையை ஒப்புக்கொள்ளாதவர்கள் யார்? இதை ஒழிக்கவேண்டுமென்று சொல்லாதவர்கள் யார்? இதற்காக எத்தனை காலமாக முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. ஜாதி வித்தியாசம், உயர்வு தாழ்வு கூடாது. அதற்கு ஆதாரம் இல்லை என்றும் சொல்லாத பெரியார் யார்? ஆயினும், ஏதாவது பலன் ஏற்பட்டிருக்கின்றதா! ஒரு சிறிதும் காணப்படவில்லையே. இதற்கு ஏதாவது ஒருவழி செய்துதானே ஆகவேண்டும். எனவே இதற்குச் சரியான வழி அறிவினாலோ ஞானத்தினாலோ போதனையினாலோ ஏற்பட்டுவிடும் என்கின்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இது பெரிதும் அரசாங்கச் சட்டத்தினாலும், அரசியல் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தினாலும்தான் இதை (அதாவது இந்த உயர்வு தாழ்வு வித்தியாசத்தை) ஒழிக்க முடியும்."

* * *

"மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது, கோயிலுக்குள் போகக்கூடாது, குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்கின்றவைபோன்ற கொள்கைகள் தாண்டவமாடும் ஒரு நாட்டைப் பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக்குழம்பால் எரிக்காமலோ, சமுத்திரத்தால் மூழ்கச் செய்யாமலோ, பூமிப் பிளவில் அமிழச் செய்யாமலோ விட்டிருப்பதைப் பார்த்த பிறகுங்கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் சர்வ தயாபரர் என்றும் யாராவது சொல்லவந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். இம்மாதிரி கொடுமைப்படுத்தி தாழ்த்தப்பட்ட ஒரு பெரிய மக்கள் சமூகம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையோடும் சாந்தத்தோடும் அஹிம்சா தர்மத்தோடும் இருக்கவேண்டுமென்று விரும்புகின்றீர்கள் என்பதும் இம்மாதிரியான மக்கள் இன்னமும் ஒரு நாட்டில் இருந்துகொண்டு உயிர் வாழ்வதைவிட அவர்கள் இம்முயற்சியில் உயிர் துறப்

பதை உண்மையிலேயே தப்பு என்று யாராவது நினைக்கின்றீர்களா என்பதும் எனக்கு விளக்கவில்லை.

"இம்மாதிரி ஒரு பெரிய மனித சமூகத்தைக் கொடுமைப்படுத்தி அடக்கி வைத்துக்கொண்டிருக்கின்ற ஒரு நாடு சுயராஜ்யம் என்றோ, அரசியல் சுதந்திரம் என்றோ, பூரண விடுதலை என்றோ வாயினால் உச்சரிக்கவாவது யோக்கியதை உடையதாகுமா என்று கேட்கிறேன்............... ஆதலால் இக் குற்றங்கள் நமது நாட்டைவிட்டு ஒழிக்க முயற்சிக்கவேண்டியது சமுதாய சீர்திருத்தக்காரர்கள் கடமை மாத்திரமல்லாமல் அரசியல் சீர்திருத்தக்காரர்கள் என்பவர்களுடையவும் முக்கியமான கடமையேயாகும்."

அங்கு கூடியிருந்த ஜனக்கூட்டமும் அக்கருத்துகளை அங்கீகரிப்பதுபோல் பலமாகக் கரகோஷமும் ஆரவாரமுஞ்செய்தது, ஈரோடு பெரியார் பேச்சைக் கேட்க. அப்பப்பா! எவ்வளவு கூட்டம்! அந்த வி. பி. ஹாலே இடங்கொள்ளவில்லை. அவர் சுமார் மூன்று மணிநேரம் பேசினார். ஆனால் அவ்வளவு மக்களும் அமைதியாக இருந்து (கரகோஷ ஆரவார சமயங்கள் தவிர) அவரது பிரசங்கத்தைக் கேட்டனர். அன்று அவர் பேசிய பிரசங்கம் முழுதும் ருசிகரமாகவும் தர்க்க ரீதியாகவும் அர்த்தபுஷ்டியுடையதாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

3. நாவன்மையும் நாயகத்துவமும்

இளமையில் பள்ளியில் சரியாகப் படித்தறியாத ஒரு மனிதர் இவ்வளவு சரளமாகவும், சரமாரியாகவும் வாசா மகோசரமாய்க் கேட்போர் யாவர் கருத்தையுங் கவருந்தன்மையில் தங்கு தடையின்றி நீண்ட நேரம் சுவாரஸ்யமாய்ப் பேசுவதற்கு எவ்விதம் சாத்தியப்படுகிறது?

சிறு வயதில் கடை வீதியில் மஞ்சள், மிளகாய் முதலிய வைகளை யெல்லாம் ஏலம் போட்டு உரக்கக் கத்தி விற்கும் வேலையில் ஈடுபட்டிருந்த ஒரு வியாபாரி, இன்று தமிழ் நாட்டு மக்களனைவரும் கண்ணிமையாது வாய் பிளந்து நின்று ஆர்வத்தோடு கேட்கக்கூடிய விதமாகச் சோணு மாரியாகச் சொற்பொழிவு ஆற்றுந்திறனை எங்கு பெற்ருர்? அவரது பேச்சு வன்மையின் இரகசியமென்ன? இதற்கு இவர் கற்றுள்ள வித்தைதான் என்ன? என் றெல்லாம் நான் அதிசயித்தேன். நான்மட்டுமல்ல; அவரது பிரசங்கத்தைக் கேட்கும் ஒவ்வொருவரும் இவ்விதந்தான் நினைத்து ஆச்சரியப்படுவார்கள். இவர் கொண்டுள்ள கொள்கையைக் கண்டு அருவருப்பவர்கள் கூட, இவ ருடைய பிரசங்கத்தைப் பெரிதும் விரும்புகிருர்கள்; உண்மையாகச் சொல்லவேண்டுமானுல், இவரது பிரசங் கத்தைக் கேட்டுப் புகழாதவர்களே இல்லை எனலாம். இவரது பேச்சுத் திறமையை—நாவன்மையைப் பாராட்டி இரு அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளிலிருந்து சிலவற்றை இங்கு எடுத்துக் காட்டுவது பொருத்தமா யிருக்குமென நம்புகிறேன்.

ஆனந்த விகடன் பத்திரிகையில் "கல்கி" என்பவர் ஈ. வே. ராவின் பிரசங்கத்தைப்பற்றி எழுதுகையில், "அதிக நீளம் என்னும் ஒரு குறைபாடு இல்லாவிட்டால் ஈரோடு ஸ்ரீமான் ஈ. வே. இராமசாமி நாயக்கருக்குத் தமிழ்நாட்டுப் பிரசங்கிகளுக்குள்ளே முதன்மை ஸ்தானம் ஒரு கணமும் தயங்காமல் அளித்து விடுவேன்............... எவ்வளவுதான் நீட்டினுலும் அவருடைய பேச்சில் அலுப்புத் தோன்று வது கிடையாது............... அவர் உலகாநுபவம் என்னும் கலாசாலையில் முற்றுணர்ந்த பேராசிரியர் என்பதில்

சந்தேகமில்லை. எங்கிருந்துதான் அவருக்கு அந்தப் பழமொழிகளும் உபமானங்களும் கதைகளும் கற்பனைகளும் கிடைக்கின்றனவோ நான் அறியேன்............... தாம் உபயோகிக்கும் சொற்கள் எல்லாம் செந்தமிழ்ப் பதங்கள் தாமா என்று நாயக்கர் சிந்திப்பதில்லை. எழுவாய் பயனிலைகள், ஒருமை பன்மைகள், வேற்றுமை உருபுகள் முதலியவைகளைப்பற்றியும் அவர் கவலைப்படுவதில்லை. ஆனால் தாம் சொல்ல விரும்பும் விஷயங்களை மக்களின் மனதைக் கவரும் முறையில் சொல்லும் வித்தையை அவர் நன்கறிவார். அவர் கூறும் உதாரணங்களின் சிறப்பையோ சொல்லவேண்டியதில்லை.......... ஸ்ரீ. ராமசாமியாரின் பிரசங்கம் பாமர மக்களுக்கே உரியது என்று சிலர் கூறக் கேட்டிருக்கிறேன். பாமர மக்களை வசப்படுத்தும் ஆற்றல் தமிழ்நாட்டில் வேறெவரையும்விட அவருக்கு அதிகம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதிலிருந்து அவருடைய பிரசங்கம் படித்தவர்களுக்கு ரஸிக்காது என்று முடிவு செய்தல் பெருந் தவறாகும். பி.ஏ., எம்.ஏ. பட்டதாரிகளும் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறார்கள். அவருடைய விவாதத் திறமை அபாரமானது. 'இவர்மட்டும் வக்கீலாக இருந்தால் நாமெல்லாம் ஓடு எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்' என்று ஒரு பிரபல வக்கீல் மற்றொரு வக்கீல் நண்பரிடம் கூறியதை நான் ஒரு சமயம் கேட்டேன். உபயோகமற்ற வாதங்களும் அவர் வாயில் உயிர் பெற்று விளங்கும்" என்று பாராட்டி எழுதியிருக்கிறார்.

இதுபோன்றே "காந்தி" என்னும் பத்திரிகையில் வ. ரா. என்பவர் பெரியார் நாயக்கரைப்பற்றி எழுது-

கையில், "அப்பா! நாயக்கரின் அழகு பிரசங்கத்தை, ஆணித்தரமான சொற்களை, அணியணியாய் அலங்காரஞ் செய்யும் உபமானங்களை, உபகதைகளை, அவரது கொச்சை வார்த்தை உச்சரிப்பை, அவரது வர்ணனையை, உடல் துடிதுடிப்பைப் பார்க்கவும் கேட்கவும் எவ்வளவு தூரத்திலிருந்து ஜனங்கள் வண்டுகள் மொய்ப்பது போல வந்து மொய்ப்பார்கள்.................... இலக்கணம், சந்தி, கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி முதலியன நாயக்கர் அவர்களைக் கண்டு நடுங்க வேண்டுமேயொழிய அவைகளை இலட்சியம் செய்பவர் நாயக்கர் அல்ல. அவர் இயற்கையின் புதல்வன். மண்ணை மணந்த மணாளன். மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகமில்லை" என்று வருணித்திருக்கிறார்.

இவ்விதம் பலரும் மகிழ்ந்து பாராட்டும் வகையில் பேசுகிற திரு. இராமசாமி நாயக்கரின் பிரசங்கத்தை அவரது பெற்றோர்கள் கேட்கும் பாக்கியம் பெற்றிருப்பார்களானால் எவ்வளவு ஆச்சரியமும் ஆனந்தமுங் கொள்வார்க ளென்பதைக் கூறவும் வேண்டுமா? 'நம் இளைய மகனா—முரட்டுச் சுபாவமுள்ள பிள்ளையா—இவ்விதம் பலரும் வியக்கப் பிரசங்கம் புரிகிறான்? நம் இராமசாமியா தமிழ்நாட்டுத் தலைவனாய்—பெரியோனாய்த் திகழ்கிறான்?' என்று பெரு வியப்புகொண்டு பூரித்துப் போவார்கள் என்பது திண்ணம்.

"ஈன்ற பொழுதில் பெரிதுஉவக்கும்; தன்மகனை
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்பது தமிழ் மறைமொழி யன்றோ! நாயக்கர் பொது

வாழ்வில் மீடுபெற்று விளங்குவதற்கு அவரது தன்னல மற்ற சேவையும் தியாகமும் காரணமாயிருந்தாலும், அவரது நாவன்மையும் முக்கிய காரணமாகும். அவர் காங்கிரஸி லிருந்தபோதும் சரி; பின்னர் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்து நடத்திவரும் இக்காலத்தி லுஞ் சரி; அவரது சிறந்த பிரசங்கமே அவருக்குப் பெருமையையும், இணையற்ற தலைமையையுந் தந்து வரு கிறது; இன்றுள்ள உயரிய நிலைமைக்கே அவரது பேச்சு வன்மைதான் மூலகாரணம் என்பது அடியேனது தாழ் மையான கருத்து.

ஆமாம்; நாயக்கர் பேச்சு வன்மை பெற எங்கு போய்ப் படித்தார்? யாரிடம் பழகினர்? பேசும் ஆற்றல் அவருக்குப் பிறரிடமிருந்து வரவில்லை; இயற்கையாகவே முகிழ்ந்தது. அவரது இயற்கையறிவே பேச்சு வன்மையை வெளிப்படுத்தியது. வாலிபப் பருவம் கழியும்வரை மறைந்து கிடந்த—அடங்கிக் கிடந்த இயற்கை அறிவு ஆற்றல் காலதேவன் தட்டியெழுப்பியதும் விகசிதமடைய லாயிற்று. ஆரம்பத்தில் அவர் பேசத் தொடங்கியபோது சற்று தட்டித்தடுமாறியும் விழித்து நிற்கவுமே செய்த தென அவரை ஆதியிலிருந்து அறிந்தவர்கள் கூறுகின்ற னர். ஒத்துழையாமைக் காலத்தில் பொது மேடையில் இவர் கொண்டுவந்து நிறுத்தப்பட்டபோது, பணக்கார ரொருவர் காங்கிரஸில் சேர்ந்து சேவை செய்ய வந்திருக் கிறார் என்ற தோரணையிலேயே பொதுமக்களுக்கு அறி முகப்படுத்தப்பட்டா ராதலால், பொதுமக்கள் அவரிடம் பேச்சை அதிகமாக எதிர்பார்க்கவில்லை. அவரும் சில நிமிஷங்களே இரண்டொரு வார்த்தை தயங்கித் தயங்கிப்

பேசிவிட்டு அமர்ந்துவிடுவார். அவர் நாட்டுப்புறத்தில் பணக்காரர்களா யுள்ளோர் இருப்பதுபோல், ஒருவிதமாக வேஷ்டியை கட்டிக் கோட்டும், தலைப்பாகையும் அணிந்து நிற்பாராம். பொதுமக்களுக்கு அவரை அந்தக் கோலத்தில் பார்ப்பது தமாஷாக இருக்குமாம். நாளடைவில் தான் அவரது பேச்சுத் திறமை வெளிப்படலாயிற்று. அவரது நாவன்மை வெளிப்பட்டபிறகு, மற்ற தலைவர்களெல்லாம் அதிகமாகப் பேசாது ஒதுங்கி நின்று நம் நாயக்கரைப் போகுமிடமெல்லாம் அதிகமாகப் பேசச் சொல்வார்களாம். கிராம ஜனங்களும் அவர் பிரசங்கத்தையே கேட்க விரும்புவார்களாம். எதற்கும் புள்ளி விவரங்கள் கொடுத்துப் பேசுவதில் நாயக்கர் மகா நிபுணர். சாதாரணமாக, மக்கள் மனதை எளிதில் கவராத மதுவிலக்கு, கதர் முதலிய விஷயங்களைப் பற்றிக் கூட அவர் சுவாரஸ்யமாகப் பேசுவாராம். இவ்விதமாக நம் நாயக்கர் இன்று தமிழ் நாட்டில் அவரைப்போன்ற சிறந்த பிரசங்கி இல்லை என்று சொல்லக்கூடிய உயர்ந்த ஸ்தானத்தை யடைந்துவிட்டார்.

---

4. ஞானோதயமும் தேச சேவையும்

அது கிடக்கட்டும். பெரிய வைதீக குடும்பத்தில் தோன்றிய இராமசாமி நாயக்கர்—பரம பாகவதர்களான பெற்றோர்களுக்குக் குமாரராகப் பிறந்த இராமசாமி நாயக்கர் எவ்விதம் நாஸ்திகரானார்? கடவுள், மதம், சடங்கு, ஆசாரம் முதலியன வேண்டாமென சொல்லக் கூடிய உலோகாயதரானார்? என்ற கேள்வி எழக்கூடும். நமது சமூக அமைப்பே, சட்டுத்திட்டங்களே, மூடப்

பழக்கவழக்கங்களே, ஆசார அநுஷ்டானங்களே இராம சாமி நாயக்கரை நிரீசுவரவாதி யாக்கியது என்றால் மிகை யாகாது. இளமையிலேயே அவருக்குத் தன் மதிப்பு உணர்ச்சி யுண்டாவதற்கும், சமூகக் கட்டுதிட்டங்களின் மீது வெறுப் பேற்பட்டதற்கும் ஒரு சிறு சம்பவம்—ஆனால் விபரீத சம்பவம்—அடிகோலியது; ஆஸ்பதமா யிருந்தது. அச்சம்பவம் என்ன? நம் நாயக்கரை அவரது பெற்றோர் ஆறுவது வயதில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினர். அவர் அங்கு படித்து வருகையில் ஒருநாள் அவருக்குத் தண்ணீர் தாகம் ஏற்பட்டது. எனவே, உபாத்தியாயர் இல் லத்தில் நீரருந்தச் சென்றார். ஆனால், 'வாத்தி யாரம்மா' அவருக்கு நீரைத் தூக்கி ஊற்றினார். நாயக்கர் இதைக் கண்டார். ஆச்சரியமும் ஆத்திரமும் உற்றார். இதற்குமுன் மற்ற பிள்ளைகளுக்கும் இவ்விதமே செய்யப்பட்டதைக் கண்டிருந்தும் அப்போதெல்லாம் அவர் மனதில் இவ்வேற்றுமை அதிகமாகப் படவில்லை. தமக்கு நேரே நடந்த பிறகுதான் அவர் உணர்ச்சி பெற்றார். ஆசிரியர் குடும்பத்தார் உயர்ந்த சாதியாரெனச் சொல்லப்படும் ஒதுவார் வகுப்பினர். ஆதலால் அவர் களினும் தாமும் மற்ற பிள்ளைகளும் தாழ்ந்த சாதியா ரெனக் கருதி இவ்விதம் நடத்தப்படுகிற தென்பதை அறிந்தார். இவ்வித அவமானத்தைத் தடுக்கவேண்டிச் சுற்றுப் பக்கங்களிலுள்ள வீட்டாரிடம் நீர் வாங்கிக் குடிக்கலாமென்றால் அதற்கும் ஒரு தடையிருந்தது. அது என்னவென்றால், 'சுற்றுப்புறவாசிகள் அனைவரும் தாழ்ந்த வகுப்பினர்; ஆதலால் அவர்களிடமிருந்து நீர் வாங்கிக்

குடிப்பது கூடாது; அநுசிதமாகும்' என ஆசிரியராலும், மற்றவர்களாலும் கூறப்பட்டதேயாகும். இவ் விபரீத நிலைமை நாயக்கருக்கு இன்னும் வியப்பையுந் திகைப்பையும் உண்டுபண்ணியது. "இதென்ன! அக்கிரமம்! மனிதனுக்கு மனிதன் வித்தியாசமாமே? ஓதுவா மூர்த்தி ஆசிரியருக்கும் நமக்கும் என்ன வேறுபாடு? சுற்றுப்புறத்தில் வசிக்கும் மிகத் தாழ்த்தப்பட்டவர்களெனத் கருதப்படும் மக்களுக்கும் நமக்குந்தான் என்ன பேதமிருக்கிறது? உருவ அமைப்பிலோ தோற்றத்திலோ பேச்சிலோ நடையுடைபாவனைகளிலோ எதிலும் எவ்வித வேறுபாட்டையும் காணேமே! ஓதுவாருக்கு இருப்பதுபோல்தான் நமக்கும் கண் காது மூக்கு நாக்கு எல்லாம் இருக்கின்றன. நமக்கு இருப்பதுபோலவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் எல்லாம் ஒற்றுமையாயிருக்கிறது? அப்படியிருக்க, ஓதுவாரைவிட நாம் தாழ்ந்தவர்கள்; நம்மைவிட மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்று கருதப்படுவதற்குக் காரணமென்ன?" என அவரது இள நெஞ்சம் எண்ணியது. இதே ஆராய்ச்சிதான் அவர் பிற்காலத்தில் பெரியவராய் காங்கிரஸில் சேர்ந்து தேசசேவை செய்துவந்த காலத்திலும்—அங்கு பிராம்மணர்களென்போர் பிராம்மணரல்லாதார் எனச் சொல்லப்படும் மற்றவர்களிடம் காட்டும் வேற்றுமையையும் நடந்துகொள்ளும் தோரணையையும் கண்டகாலத்தும் ஏற்பட்டது. இவ்வித எண்ணம் முகிழ்த்து முகிழ்த்து, இதைப்பற்றித் தாமே சிந்தித்து சிந்தித்து, மனதினுள்ளேயே பெரிய ஆராய்ச்சி செய்து கண்ட முடிவுகள்தான் இன்று அவர் பேசும் பேச்சும் செய்யும் செயல்களுமாகும். அவர் சுயமரியாதை இபக்கம்

என்ற ஒரு இயக்கத்தைத் தோற்றுவிக்கக்கூடிய அவசியம் நேர்ந்ததற்கு மேற்குறித்த உணர்ச்சிகள்தான் காரணமாகும்.

நாயக்கர் தேச பக்த சபையாகிய காங்கிரஸில் சேர்ந்தது எப்படி? காந்தியடிகளின் தலைமையை ஏற்றது எவ்விதம்? இளமையிலிருந்த அவரது இயற்கையும் போக்கும் திடீரென மாறி, காங்கிரஸில் சேர்ந்து தேச சேவை செய்யவேண்டுமென்ற எண்ணம் உதித்தது எவ்வாறு? அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட பெரு மாறுதலுக்கு ஏதேனும் ஒரு காரணமிருக்க வேண்டுமல்லவா! அது என்ன? அதற்குச் சரியான காரணம் நமக்குப் புலப்படவில்லை. நாயக்கருடன் பழகிய நண்பர்களாலும் அதைச் சொல்ல முடியவில்லை.

ஸ்ரீமான் நாயக்கர் ஈரோட்டில் வேங்கட நாயக்கர், சின்னத் தாயம்மை என்ற தம்பதிகளுக்கு இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தார். அவருக்குக் கிருஷ்ணசாமி என்ற ஒரு அண்ணனும், கண்ணம்மாள் என்ற ஒரு தங்கையும் உண்டு. இவர் இளமையில் முரட்டுச் சுபாவமுடையவராய், பெற்றோருக்கு அடங்காது மனம் போனபடி திரிந்தார். தந்தையார் அவரைப் படிக்க வைத்தும் படிப்பில் கவனத்தைச் செலுத்தாது மூன்றாவது வகுப்புக்கு மேல் படிக்கவில்லை. ஆகவே, தாயார் சலிப்புற்றே என்னவோ விதவையாயிருந்த தன் சகோதரிக்கு அவரை ஸ்வீகாரப் பிள்ளையாகக் கொடுத்துவிட்டார். ஆனால், அவரது ஒன்பதாவது வயதில் எக்காரணத்தாலோ ஸ்வீகாரத்தை ரத்துசெய்து மீண்டும் இவரைத் தம்மிடம் திருப்பி யழைத்துக்கொண்டார். தந்தை பத்து வயதில்

அவரைப் பள்ளியினின்றும் நிறுத்தி மளிகை சாமான்களை ஏலம் கூறி விற்கும் வேலையில் நியமித்தார். ஆயினும் நாயக்கர் தமது துடுக்கை விடாது உள்ளூர் கதிகலங்கும்படி போக்கிரியாய்—மைனராய்—ஸ்திரீலோலராய்த் திரிந்தார். அவர் தமது வைஷ்ணவ சம்பிரதாயப்படி வைதீகமாயில்லாது ஆசார அநுஷ்டானங்களைக் கைக்கொள்ளாது மனம்போன போக்கில் போய்க்கொண்டிருந்ததைக் கண்ட பெற்ருேர் தாய் வழி உறவான நாகம்மையாரை விவாகஞ் செய்துவைத்து, தனிக் குடித்தனம் நடத்தும்படி விட்டனர் என்று இவ்விதமான வரலாற்றைக் கேள்விப்படுகிருேமே யொழிய, அவர் தமது விபரீதப்போக்கை விடுவதற்கேற்பட்ட சந்தர்ப்பமும், அவர் ஒழுங்காகவும், பெருந்தன்மையாகவும் நடக்கத் தலைப்பட்டுக் காங்கிரஸில் சேர்ந்ததற்கு வாய்த்த வாய்ப்பும் என்ன என்பதை அறிய முடியவில்லை. ஆனுல் நாம் ஒன்று ஊகிக்கலாம். இளமையிலேயே மனிதனுக்கு மனிதன் செய்யுங் கொடுமையையும், அதற்கு அடிப்படையான காரணம் அடிமை யுணர்ச்சியே என்பதையும் அறிந்து வைத்திருந்தா ராதலால், மக்களிடையேயுள்ள அடிமைத்தனத்தையும், உயர்வு தாழ்வையும் போக்கி சமூகத்தை உன்னதமான சமத்துவ நிலையில் வைப்பதற்குரிய சேவையை மேற்கொள்ள வேண்டுமென்ற உணர்ச்சியே அவரை அடிமையிலாழ்ந்து கிடக்கும் இந்திய மக்களுக்குச் சுதந்தரத்தை வாங்கித்தரப் பாடுபடும் காங்கிரஸில் சேர்ந்து தேசசேவை செய்ய முற்பட்டார் என்ற முடிவுக்கு நாம் வரலாம். அதைத் தவிர வேறு காரணமிருக்க நியாயமில்லை. இவ்வித உணர்ச்சி இல்லாவிடில், தந்தையார் கஷ்டப்பட்டுப் பணஞ் சேர்த்து வைத்திருந்ததற்கு இவர்

இளமையிலிருந்தபடியே, மற்ற பணக்கார மைனர் பிள்ளைகள் நடந்துகொள்வது போலவே, கடைசிவரை சிற்றின்பத்திலும், மற்றுந் தவருன காரியங்களிலும் ஈடுபட்டுச் சுகபோகங்களை யநுபவித்து காலங் கழித்திருப்பார் என்பது திண்ணம்.

'நாயக்கருக்கு அரசியல் உலகைக் காண்பித்தவர் டாக்டர் வரதராஜுலு நாயுடு' என்று விஷயமறிந்த ஒரு அன்பர் சொல்லுகிருர். 'நாயக்கர் பொதுஜன சேவை வானத்தில் திடீரென்று தோன்றினர் எனலாம். டாக்டர் நாயுடு அவர்களின் வெங்கலநாத சங்கீதப் பிரசங்கம் நாயக்கரின் மனப்போக்கையும் வாழ்க்கையின் போக்கையும் ஒருவாறு மாற்றிவிட்டது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனல், நாயக்கரின் உள்ளத்தில் தியாகத்தையும் தைரியத்தையுந் தூண்டி அவைகளை மணக்கச் செய்தவர் ஆச்சாரியார் என்பது அடியேனது அபிப்பிராயம்' என்று கூறுகிருர் நண்பர் வ. ரா.

ஈரோடு சீமானுய் கனவானுய் மளிகைக்கடை யதிபதியாய் இருந்த நம் நாயக்கர் எப்படியோ பொது வாழ்வில் தேச சேவையில் திடீரென சேர்ந்தார் என்பது மட்டும் உண்மை. தென்னுப்பிரிக்காவி லிருந்து வந்த காந்தியடிகள் சர்க்கார் ஏற்படுத்திய ரௌலட் சட்டத்தை யுடைக்கத் தொடங்கிய ஒத்துழையாப் போராட்டத்துக்காக அடித்த முரசு ஒலி கேட்டு நம் நாயக்கரும் யுத்த சன்னத்தரானுர். காந்தியடிகள் வந்ததால் நாட்டில் என்றுமில்லாதவாறு விழிப்பு ஏற்பட்டது போலவே, நாயக்கரிடத்திலும் ஒருவித விழிப்புண்டாயிற்று. நாயக்கர் தமது இயற்கையான துடிப்போடும் ஆர்வத்தோடும் ஒத்துழையாப் போராட்டத்தில் கலந்துகொண்டார்; தீவிர

மாகப் பங்கெடுத்துக் கொண்டு சேவை செய்யலானார். அச்சமயம் அவர் செய்த பிரசங்கங்களைக் கேட்க பொது மக்கள் பல பாகங்களி லிருந்தும் வெகு தூரத்திலிருந் தும் வருவார்கள். அவர் அச்சமயம் பேசிய உணர்ச்சி மிக்க பிரசங்கங்களைக் கேட்டவர்கள், அவரது வீரமுழக் கம் இன்னும் காதில் முழங்கிக் கொண்டிருப்பதாகக் கூறியதைக் கேட்டிருக்கிறேன்.

அவர் காங்கிரஸிலிருந்த பத்து வருஷ காலங்களில் நூற்றுக் கணக்கான காங்கிரஸ் கூட்டங்களில் பேசியிருக் கிறார். பல ஜில்லா, தாலூக்கா அரசியல் மகாநாடுகளில் தலைமை வகித்திருக்கிறார். ஒருமுறை திருவண்ணாமலையில் நடைபெற்ற தமிழ் மாகாண காங்கிரஸ் மகாநாட்டிற்குத் தலைவராக இருந்திருக்கிறார். காங்கிரஸின் நிர்மாண வேலைத் திட்டங்களாகிய கதர், மதுவிலக்கு, இந்தி முத லியவைகளை ஆதரித்துப் பேசிய பிரசங்கங்கள் அனந்தம். மதுவிலக்கு சம்பந்தமாக அவர் கிராமங்கள்தோறும் வெகு மும்முரமாகப் பிரசாரஞ் செய்து வருவதைக் கண்டு மகிழ்ந்த ஒரு கனவான் அவரது சுற்றுப் பிரயா ணம் சிரமமில்லாமல் இருப்பதற்காக மோட்டார் கார் ஒன்று வாங்கிக்கொள்ள ஆயிரம் ரூபாய் நன்கொடையாக அளித்தார் என்றால், அவரது சேவையின் பெருமையை அதிகஞ் சொல்லுவானேன்!

ஒத்துழையாப் போராட்ட காலத்தில் ஈரோட் டில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியலில் சர்க்கார் விதித்த தடை யுத்தரவையும் மீறி மறியல் செய்து சிறை சென்றிருக்கிறார். அவரைப் பின்பற்றி அவரது மனைவியாரும் சகோதரியாரும் மறியல் செய்தது குறிப் பிடத்தக்கது. அதற்குப் பின், தீண்டாதார் உரிமை

விஷயமாக வைக்கம் (திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தது) என்னும் ஊரில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்துக்குத் தம் மனைவியுடன் சென்று கலந்துகொண்டார். எனவே, திருவாங்கூர் சர்க்கார் அவரைச் சிறை செய்தனர். அவர் சிறை சென்ற பின்னர் அவரது மனைவியார் நாகம்மாள் பெண்கள் படைக்குத் தலைமை வகித்து வைக்கத்தில் உயர் வகுப்பார் வசிக்கும் வீதியில் நடந்து சத்தியாக்கிரகஞ் செய்த காட்சி அற்புதமானதாகும். இவ் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு தீவிரமாக வேலை செய்து வெற்றிபெற்றதால் தான், அவருக்கு "வைக்கம் வீரர்" என்ற சிறப்புப் பெயர் ஏற்படலாயிற்று. அவர் அக்காலத்தில் வைக்கத்தில் நடத்திய தீண்டாதார் உரிமைப் போரின் எதிரொலியே—பயனே—சமீபத்தில் திருவாங்கூரில் தாழ்த்தப்பட்டார் அனைவருக்கும் ஆலயப்பிரவேச உரிமை வழங்கப்பட்டது என்று சொல்லலாம். ஆனால் இச்சமயத்தில் ஈ. வே. ரா. சேவையை நினைப்பாரே யில்லை. இவருக்கு நியாயமாகச் சேரவேண்டிய புகழ் வேறொருவருக்குப் போய்விட்டது. என்னே உலக இயல்பு!

நம் பெரியார் புகழையோ பயனையோ கருதி வேலை செய்பவரல்லர். தமக்குச் சரியெனப் பட்டதை—தாம் செய்யவேண்டிய கடமை எனப் பட்டதைத் தயங்காது ஊக்கத்தோடும் உற்சாகத்தோடுஞ் செய்து வருவார். அவர் காங்கிரஸி லிருந்தபோது தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும், காரியதரிசியாகவும் பல வருஷங்கள் இருந்து காங்கிரஸ் வேலைகளை நிர்வகித்து வந்திருக்கிறார். அவர் காங்கிரஸில் சேர்வதற்கு முன்னர், ஈரோட்டிலுள்ள பொது ஸ்தாபனங்களி லெல்லாம் ஸ்தானம்

வகித்து வந்திருக்கிறார். ஈரோடு நகர சபைக்கும், ஜில்லா போர்டுக்கும் மெம்பராகவும் தலைவராகவும் இருந்திருக்கிறார். சமய சம்பந்தமாகவும் கோவை ஜில்லா ஈரோடு சர்க்கிள் தேவஸ்தான கமிட்டிக்குக் காரியதரிசியாகவும், தலைவராகவும் 1904-வது வருஷ முதல் 1927-வது வருஷம் வரை இருந்திருக்கிறார். எல்லாவற்றிலுமே தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பை யுணர்ந்து ஒழுங்காகவும் நிர்வாகத் திறமையோடும் காரியங்களை நடத்தி வந்திருக்கிறார்.

---

5. சுயமரியாதை இயக்க உதயம்

இவ்வளவு தூரம் காங்கிரஸிடத்திலும் காந்தியடிகளிடத்திலும் பெரும் பற்றுகொண்டு தேச சேவை செய்து வந்த நம் நாயக்கருக்கு மனமாறுதல் ஏற்பட்டதற்குக் காரணமென்ன? அதுதான் காங்கிரஸில் உள்ள பார்ப்பனர்கள் காட்டிவந்த மனோபாவமும், அவர்கள் செய்து வந்த விஷமமும் சூழ்ச்சியுமாகும். எப்படியோ தமிழ் நாட்டுக்குப் பெருஞ் சனியன்களாக வந்து குடியேறிய ஆரியர்களாகிய பார்ப்பனர்கள் நீண்ட காலமாக, தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்குஞ் செய்து வரும் அநீதியும் கொடுமையும் போதாவென்று இந்த இருபதாம் நூற்றாண்டிலும் சமூக சமய விஷயங்களில் மட்டுமல்லாது, அரசியலிலும், மற்றும் பொது ஸ்தாபனங்களிலும் ஆதிக்கம் பெற்று தமிழ் மக்களைப் பல வழிகளிலும் அலக்கழித்து வருவதைக் காணக் காண இவர் மனங் கொதித்தது. ஒரு சிறு வகுப்பார் கட்டுப்பாடாக இருந்து, மற்ற தமிழ் மக்களுக்கு இழைத்துவரும் அநீதியையும் அக்கிரமத்தையும் எவ்விதமாயினும் போக்கி, பார்ப்பனர்களது சூழ்ச்

சியிலிருந்து தமிழ் மக்களைக் காத்து முன்னுக்குக்கொண்டு வரவேண்டுமென்று உறுதிகொண்டார். இதற்கு இவர் கண்ட வழிகள் இரண்டு. ஒன்று, சாதி சமய வேற்றுமைகளையும் கொடுமைகளையும் அரசாங்க சட்டங்கள் மூலந் தகர்த்தெறிவது; மற்றொன்று, மேற் குறித்தவாறு சாதி சமய வேற்றுமைகள் ஒழியும்வரை, அரசியலிலோ, மற்ற பொது ஸ்தாபனங்களிலோ ஏற்படும் பதவிகளுக்கு வகுப்புவாரியாகப் பிரதிநிதித்தவம் அளிப்பது. இவ்விரு கொள்கைகளைக் காங்கிரஸி லிருக்கையிலேயே சமயம் நேரும்போதெல்லாம் வெளியிட்டு வலியுறுத்தி வந்தார். காங்கிரஸ் பெயரையும் காந்தியடிகள் பெயரையுஞ் சொல்லி—பொது வாழ்வில் பிராம்மணன்—பிராம்மணனல்லாதான் எனக் கூறி வேற்றுமை பாராட்டலாகாது; தகுதியைக் கவனித்தே உத்தியோகம்--பதவியளிக்க வேண்டும் என்று சமரசம் பேசி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முதல் சாதாரண ஜில்லா, தாலூகா கமிட்டிகள் வரை, தமிழ்நாட்டுக் கதர் போர்டு முதலிய முக்கிய ஸ்தாபனங்களிலெல்லாம் பார்ப்பனர்களே பதவி உத்தியோகங்களை வகித்து, ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்று வரலாயினர். இவ்வித பாரபக்ஷமான நிலைமையைப் போக்க அவர் உள்ளிருந்து எவ்வளவோ தூரம் போராடினார். ஆனால் பயனில்லை. இவ்வித நிலைமைகளே, 'தென்னாட்டைப் பொறுத்தவரை, காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு நன்மையை யளிக்கக்கூடிய ஸ்தாபனமாயிருந்து வருகிறதேயொழிய, மற்ற தமிழ் மக்களுக்கு அதனால் பலனொன்றும் ஏற்படாது' என்ற முடிவுக்கு அவரை வரும்படி செய்தன.

இவ்வெண்ணம் அதிகமாக வலுப்பெறுவதற்கு ஏற்ற வகையில் இடையே, ஒரு சம்பவம் நடைபெற்றது. 1924-ம் வருஷத்தில் காஞ்சீபுரத்தில் தமிழ் மாகாண காங்கிரஸ் மகாநாடு நவசக்தி ஆசிரியர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் நடைபெற்றது. அவரைத் தலைவராகக் கொண்டுவருவதற்கு நம் நாயக்க

ரும், டாக்டர் நாயுடுவுமே வெகுவாகப் பாடுபட்டனர். இம் மகாநாட்டில் நம் நாயக்கர் வகுப்புவாரி பிரதிநிதித்துவ சம்பந்தமான ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். அதை மகாநாட்டிலேயே வர விடாதபடி செய்ய, திரு. எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் முதலியோர் வெகுவாகப் பாடுபட்டனர். தலைவரும் அவர்களது தந்திரத்தில் சிக்கிக் கொண்டார். இச் சூழ்ச்சியறிந்து நம் நாயக்கரும், திரு. எஸ். இராமநாதன் முதலியவர்களும் அத் தீர்மானத்தை மகாநாட்டில் பிரரேபிக்கச் செய்யும்படி வற்புறுத்தி வந்தனர். திரு. முதலியார் பாடு திண்டாட்டமாய் விட்டது. கடைசியில் அவர் தாட்சணியத்துக்குக் கட்டுப்பட்டு, அத்தீர்மானத்தைப் பிரரேபிக்க அநுமதிக்க முடியாதெனக் கூறித் தள்ளிவிட்டனர். தங்களுக்குப் பக்கபலமா யிருப்பாரென்று கருதிப் பாடுபட்டுக் கொண்டு வந்த தலைவரே இவ்விதம் சாய்ந்துவிட்டதைக் கண்டதும் நாயக்கரும் அவரது சகாக்களும் மனஞ் சலித்து அப்போதே மகாநாட்டினின்றும் வெளியேறி விட்டனர். உடனே மகாநாட்டுப் பந்தலுக்கு வெளியே ஒரு பிரமாண்டமான கூட்டம் கூடிவிட்டது. அதில் நாயக்கர் மகாநாட்டில் நடந்த சதியைக் கூறி இனி தாங்கள் உரிமைக்காகப் போராடவேண்டிய காலம் வந்துவிட்டதென முழங்கினர்.

காஞ்சிபுரத்தில் முழங்கிய நாயக்கரின் வீர முரசொலி தான் பின்னர் சுயமரியாதை இபக்கமாகப் பரிணமித்தது எனலாம். நாயக்கர் திரு. எஸ். இராமநாதன், திரு. தண்டபாணி பிள்ளை, கோவை - சி. அய்யாமுத்து முதலியோர் துணைகொண்டு சுயமரியாதை எனப் பெயர் கொண்ட ஒரு இயக்கத்தைத் தோற்றுவித்தார். அவ்வியக்கத்தின் ஆதி நோக்கம் பார்ப்பனீயத்தைத் தமிழ்நாட்டினின்றும் விரட்டி யடிப்பதேயாகும். ஆகவே, நாயக்கரும் அவரது சகாக்களும் முதன் முதலாகப் புரோகித மொழிப்புப் பிரசாரத்தை வெகு மும்மரமாகப் புரிந்து வர

லாயினர். இம்முயற்சிக்குத் தமிழ் நாட்டில் வெகு விரைவில் ஆதரவு கிடைக்கலாயிற்று. சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் நாடெங்கணும் தீவிரமாகப் பரவலாயின. இத்துடன், நாயக்கர் தம் இயக்கக் கொள்கையைப் படித்தவர்களிடையேயும் பரவச் செய்வதற்காக, 1925-ல் குடியரசு என்ற பெயரோடு ஒருவாரப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்திவரலானர். இப்பத்திரிகை வெளிவந்த பின்னர் தான், நாயக்கரது இலட்சியம் எல்லோருக்கும் விகசிதமாக விளங்கலாயிற்று.

நீண்ட காலமாக பார்ப்பனீயத்துக்கு அடிமையாயிருந்து கொடுமைக் காளாகிவந்த தமிழ் மக்கள், அதையொழிக்க முற்பட்டிருக்கும் சுயமரியாதை இயக்கத்தை வெகு ஆர்வத்தோடு வரவேற்றனர். நாயக்கரின் தீவிரப் பிரசாரத்தால் அவரது கொள்கைகள் வெகு வேகமாக நாடெங்கணும் பரவலாயிற்று. ஆகையால் தான், 1926-ல் செங்கல்பட்டில் நடைபெற்ற முதலாவது சுயமரியாதை மகாநாட்டுக்குத் தமிழ் மக்களின் பரிபூரண ஆதரவு கிடைத்தது. மகாநாடு பிரம்மாண்டமாகப் போடப்பட்ட பந்தலில் வெகு சிறப்பாக நடைபெற்றது. தலைவரான திரு. சௌந்தரபாண்டிய நாடார் யானைகள் மீது ஊர்வலமாகக் கொண்டுவரப்பட விருந்தார். பார்ப்பனர்கள் சிலரது சூழ்ச்சியால் அவ்விதம் நடைபெற முடியாது போயிற்று. ஆயினும் தலைவர் ஊர்வலம் நின்று போகவில்லை. இம் மகாநாட்டுக்கு அச்சமயம் சென்னை முதல் மந்திரியாயிருந்த டாக்டர் சுப்பராயன் உட்பட, ஸர். இராமசாமி முதலியார், ஸர். பி. டி. ராஜன், ஸர். பன்னீர்செல்வம் முதலிய ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் உட்பட ஆயிரக்கணக்கான பேர் வந்திருந்தனர். அதன் பின்னர் பல மகாநாடுகள் நடைபெற்றனவாயினும், இம் மகாநாட்டைப்போல் பல பிரிவினர், பெரும்பாலார் ஆதரவைக்கொண்டு சிறந்த முறையில் நடந்தன வெனக் கூற முடியாது. பின் நடந்த மகாநாடுகளில்

மிதவாதத் தலைவர் திரு. எம். ஆர். ஜெயகர், ஸர். ஆர். கே. சண்முக செட்டியார் ஆகியவர்கள் தலைமையில் நடைபெற்ற இரு மகாநாடுகளைத்தான் சிறப்பாகக் குறிப்பிட முடியும்.

சுயமரியாதை இயக்கம், அர்த்தமற்ற சடங்குகள், மூடப் பழக்க வழக்கங்கள், சாதி சமய வேற்றுமைகளை யொழிப்பதென்று ஏற்பட்டு, மெள்ள சமயம் (மதம்), சாஸ்திரம், கடவுள் என்ற விஷயங்களிலும் தலையிடத் தொடங்கவே, சமய உணர்ச்சியுடைய மக்களிடையே ஒரு வித பரபரப்பு ஏற்படலாயிற்று. 'மதத்துக்கு ஆபத்து வந்துவிட்டது' எனப் பல மதஸ்தர்களும் கூக்குரலிட லாயினர். வைஷ்ணவர்களும், சைவர்களும், வேதாந்திகளும், கிறிஸ்தவர்களும் ஆங்காங்கு கூட்டம் போட்டு சுயமரியாதை இபக்கத்தையும் நாயக்கரையுங் கண்டிக்க லாயினர். வேதாந்த போதகாசிரியர்—கோ. வடிவேலு செட்டியார் முயற்சியின் மீது சென்னைச் சிந்தாதிரிப் பேட்டையில் ஆஸ்திக சங்கமென்ற பெயரோடு ஒரு சங்கம் சதாவதானம்—தெ. கிருஷ்ணசாமி பாவலரைத் தலைவராகக் கொண்டு ஆரம்பமாயிற்று. அச் சங்கம் சுயமரியாதை இயக்கத்தின் நாஸ்திகப் பிரசாரத்தைத் தடுக்க எதிர்ப் பிரசாரஞ் செய்து வந்தது. பாவலர் ஏற்கனவே காங்கிரஸ் பிரசாரத்திற்காக நடத்திவந்த 'தேசபந்து' வாரப் பத்திரிகையும் இம் முயற்சிக்கு ஆதரவளித்தது. பிரசாரகர்களின் வாய்ப் போர் ஒரு பக்கமும், குடியரசு, திராவிடன், தேசபந்து, தமிழ் நாடு ஆகிய பத்திரிகைகளின் எழுத்துப் போர் மற்றொரு பக்கமும் தீவிரமாக நடந்து வந்தது.

இதனிடையே, சென்னைச் சைவ சித்தாந்த சமாஜத்தார் திருநெல்வேலியில் சைவப் பெரியார் மகாநாடு திரு. சச்சிதானந்தம் பிள்ளை தலைமையில் நடத்தினர். அக் காலத்தில் சுயமரியாதை இயக்கச் சார்பிலிருந்த காலஞ்

சென்ற திரு. வா. ஓ. சிதம்பரம் பிள்ளையும், திரு. பொ. திரிகூட சுந்தரம் பிள்ளையும் போய் அம் மகாநாட்டை வெற்றிகரமாக நடைபெறுதவாறு செய்துவிட்டனர். எனவே, சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் போன்ற சீர்திருத்தக் கொள்கைகளைத் தமிழ் நாட்டில் முதன் முதலாக நிலைநாட்டத் துணிந்து வைதீக சைவ வைஷ்ணவர்களின் வசைமொழிகளைப் பெற்று பெருமை யடைந்திருப்பவரும், அவ்வியக்கப் பிரமுகர்கள் பலரால் மதிக்கப்பட்டு வந்தவருமான சுவாமி வேதாசலம் அவர்கள் தலைமையில் திருப்பாதிரிப்புலியூரில் சைவர் மகாநாடு ஒன்றை 1929-ம் ஆண்டு மே மாதத்தில் சமாஜத்தார் கூட்டினார்கள். சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் முன்னின்று இம் மகாநாட்டை நடத்தி வைத்தார்கள். இம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களில் முக்கியமானது, சைவாகமங்களில் குறிக்கப்பட்டுள்ள சமயக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு கடைப்பிடித் தொழுக முற்படுபவர் யாவராயினும், முஸ்லீம், கிறிஸ்தவர் போன்ற வேறு சமயத்தவராயினும்--அவர்களைச் சைவர்களாகவே மதிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானமாகும். 'சைவமும் தமிழும் உயர் சாதியினராகிய எங்களுக்கே உரியது; எங்களுக்கே சிவபெருமான் கைலாயத்தைத் திறந்து வைத்திருக்கிறான்' என்ற குறுகிய மனோபாவங் கொண்ட சைவர்களுக்கு இவ்வளவு தாராள நோக்கம் உண்டானதற்கே முக்கிய காரணம் இச் சுயமரியாதை இயக்கத்தின் தீவிரக் கொள்கைகளே யாகும்.

இவ்விதம் ஒரு பக்கம் பார்ப்பனர்கள் எதிர்ப்பையும் சூழ்ச்சியையும், மற்றொரு பக்கம் பல மதஸ்தர்களின் எதிர்ப்பையும் சமாளித்துக்கொண்டு நம் நாயக்கர் சுயமரியாதை இயக்கத்தை வெகு வெற்றிகரமாக நடத்தி வந்தார். சுமார் ஆறு வருஷகாலம் இவ்வியக்கம் தமிழ் நாட்டில் மிகுந்த செல்வாக்கு பெற்று விளங்கியது.

இதனிடையே 1931-ம் வருஷத்தில் லால்குடியில் நடைபெற்ற சுயமரியாதை மகாநாட்டில் கதரைக் கண்டித்து ஒரு தீர்மானங் கொண்டு வரப்பட்டதன் காரணமாக, சுயமரியாதைக்காரர்களிடையே பிளவேற்பட்டது. கோவை அய்யாமுத்து போன்ற ஒரு சிலர் அவ்வியக்கத்தை விட்டு நீங்கி, தேசிய சுயமரியாதை இயக்கமென ஒரு கட்சி ஏற்படுத்திக் கொண்டனர். ஆனால் அக்கட்சி இரண்டொரு மகாநாடுகளை நடத்தி விட்டு மறைந்தது.

நம் நாயக்கர் இவ்வித எதிர்ப்புகளை யெல்லாம் லட்சியஞ் செய்யாது, தமது பிரசாரகர்களால் ஏற்படும் தொந்திரவுகளையும் பெரிதாகப் பாராட்டாது எல்லாவற்றிற்கும் தாம் ஒருவரே ஈடுகொடுத்து தமது இலட்சியத்தை நிறைவேற்றி வைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு நடந்து வந்தார். இடைவிடாது சுற்றுப் பிரயாணஞ் செய்து ஊர் ஊராகப் பிரசாரஞ் புரிந்து வந்ததன் பயனாகவே போலும், நாயக்கர் 1932-ம் வருஷத்தில் திடீரென நோய் வாய்ப்பட்டார். சில காலம் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் அவருக்குச் சிகிச்சை நடந்தது. கடைசியில் டாக்டர்கள் சில காலம் வரை பிரசங்கஞ் செய்யக்கூடாது என யோசனை கூறினர். எனவே, இச் சந்தர்ப்பத்தை வீணாக்கக்கூடாதென்று திரு. எஸ். இராமநாதனுடன் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்து வரப் புறப்பட்டார். அவர் இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி முதலான இடங்களுக்குப் போய்விட்டு, பூலோக சுவர்க்கமென சமதர்ம வாதிகளால் கருதப்பட்டுவரும் ரஷ்யாவுக்குச் சென்றார். அங்கு சில காலம் இருந்து அந் நாட்டு நிலைமையையும், அரசியல் முறையையும், மக்கள் முன்னேற்றத்தையும் கூர்ந்து கவனித்து வந்தார். அங்கு சில இடங்களில் பிரசங்கங்கூடச் செய்தார். இங்கிலாந்திலும் இரண்டொரு பிரசங்கங்கள் செய்தாராம். இவரது பிரசங்கங்கள் திரு. இராமநாதனால் ஆங்கிலத்தில் மொழி

பெயர்த்துக் கூறப்பட்டது. அவரது இயக்கத்தின் சிறந்த கொள்கைகளைப் பாராட்டி ரஷ்யர்கள் சர்டிபிகேட்டுகள் வழங்கினர். பத்து மாதகாலம் ஐரோப்பாவைச் சுற்றிப் பார்த்துவிட்டு தாய்நாடு அடைந்தார். அவர் சிலோனில் வந்திறங்கியதும் செய்த பிரசங்கம் பலராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

அவர் சென்னை வந்ததும், நம் நாயக்கர் அச்சமயம் திராவிடன் ஆசிரியராயிருந்த திரு. டி. வி. சுப்பிரமணியம் இல்லத்தில் இரண்டொரு தினம் தங்கியிருந்தார். அங்கிருக்கையில்தான் நான் சில அன்பர்களுடன் அவரோடு அளவளாவும் பேறு கிடைத்தது. அப்போதுதான் அவரது விநயமும் அன்பும் அறிந்தேன். தியாகராய ஞாபகார்த்த கட்டிடத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் நாயக்கர் பேசிய பேச்சு ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களைக் கதிகலங்கச் செய்தது. அதற்குப் பின்னர் தமிழ் நாடெங்கணும் நாயக்கர் சமதர்மப் பிரசாரம் முன்னைக் காட்டிலும் தீவிரமாகச் செய்யலானர். அவரது புரட்சிகரமான சொற்பொழிகளைக் கேட்டுப் பணக்காரர்கள் பீதிகொண்டனர். சர்க்கார் அதிர்ச்சி யடைந்தனர். எனவே, இவர் மீதும் பத்திரிகை மீதும் சர்க்கார் அடக்குமுறை பாணத்தை எய்தனர். குடியரசுக்குத் தடை ஏற்படவே, 'புரட்சி', 'பகுத்தறிவு' என்ற பெயரோடு வேறு பத்திரிகைகள் வெளிவந்தன. நாயக்கரும் சிறையானர். இதனிடையே ஈரோட்டில் நடைபெற்ற மகாநாட்டில் சமதர்மக் கொள்கைளை அடிப்படையாகக் கொண்டு சில திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவைகளை யெல்லாம் கண்டதும் சௌந்தரபாண்டியன் போன்ற பணக்காரத் தோழர்கள் நாயக்கரை விட்டு நீங்கினர்.

1933-ம் வருஷத்தில் நாயக்கரது மனைவியார் இறந்தார். காதல் மணத்தால் கட்டுண்ட அவ்வம்மையார் சுமார் 28 வருஷ காலம் நாயக்கருடன் வாழ்ந்து, வாழ்விலும் தாழ்விலும் துணையாயிருந்து வந்தார். காங்கிரஸி

விருந்த காலத்தும், சுயமரியாதை இயக்கத் தலைவரான பிறகும் நாயக்கருடன் ஒத்துழைத்தே வரலானார். நாயக்கர் வாழ்க்கை சீர்ப்பட்டதற்கும், அவர் பொது வாழ்வில் இவ்வளவு தூரம் சிறப்படைந்ததற்கும் அம்மையார் தான் காரணமெனச் சொல்லலாம். எப்போதும் கணவனை விட்டுப் பிரியாதிருந்த அம்மையார் ஐரோப்பா சுற்றுப் பிரயாணத்திற்குத் தம்மையும் உடனழைத்துச் செல்லவில்லையே என்ற ஒரே கவலையாலேயே அவர் நோய் வாய்ப்பட்டு கடைசியில் இவ்வுலக வாழ்வை நீத்தார் என விஷய மறிந்தவர்கள் கூறுகிறார்கள். நாயக்கர் நண்பர்களுக்கும் இயக்கத் தோழர்களுக்கும் அம்மையாரிடம் தேவதா விசுவாச முண்டு. நாயக்கரைத் தனிப்பட்ட சில விஷயங்களுக்காக வெறுப்பவர்கள் கூட அம்மையாரிடம் அன்பும் மதிப்புங் கொண்டிருந்தனர். அவ்வளவு நற்குணமமைந்த அம்மையார் பிரிவு பலருக்கும் வருத்தத்தைத் தந்ததென்றால் ஆச்சரியமில்லை. எதற்கும் கலங்காத நாயக்கரது திடநெஞ்சங்கூட அம்மையார் பிரிவினால் கலங்கியதெனில் அதிகங் கூறவேண்டுமோ!

நாயக்கர் கால தேச வர்த்தமானத்தைக் கவனித்தார். தமது சமதர்ம பிரசாரத்துக்கு இது சமயமல்ல என உணர்ந்தார். யாதொரு பலனுமில்லாது சர்க்கார் தடையை மீறிச் சிறை செல்வது வீணென்ற முடிவுக்கு வந்தார். ஆகவே, அவர் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்க முற்பட்டார். தாம் ஆதியிலிருந்து வற்புறுத்திவரும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கு அக்கட்சி துணை செய்கிறதென்ற எண்ணத்தால் அதைப் பகிரங்கமாக ஆதரிக்கலானார். தமது கொள்கைக்கே விரோதமாய் ஜமீன்தார்கள் பணக்காரர்களோடு நட்பு கொண்டாடினார். 1933-ல் நடந்த இந்தியா சட்டசபைத் தேர்தலிலும் 1936-ல் நடந்த சென்னை சட்டசபைத் தேர்தலிலும் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்துப் பல இடங்களில் பிரசாரஞ் செய்யலானார். இத்தேர்தல்களில் தாம் ஆதரித்த ஜஸ்டிஸ் கட்சிக்

குப் படுதோல்வி யேற்பட்டதைக் கண்டும் அவர் மனம் சோர்வடையவில்லை. எந்நிலைமையிலும் தம் கடமையையும் இலட்சியத்தையும் நிறைவேற்றியே தீர்வதென்ற கருத்தோடு மனவுறுதியாக வேலை செய்து வரலானார்.

இந்நிலையில் சென்னையில் காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டது. இடையேயுள்ள சிலர் நாயக்கரைக் காங்கிரஸில் சேர்ந்து விடும்படி தூண்டி வந்தனர். காங்கிரஸ் தாம் வற்புறுத்திவரும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொள்வதாயின், எக்கணத்திலும் சேரத் தயார் எனக் கூறி வந்தார்.

---

6. தமிழ் மொழிக்காகச் சிறைவாசம்

கடைசியாக, நம் பெரியார் செய்துள்ள அற்புதமான செயல் சரித்திரத்தில் இடம் பெறத்தக்கதாகும். சென்னை சர்க்கார் பள்ளி மாணவர்களுக்கு இந்தியைக் கட்டாய பாடமாக வைத்திருக்கும் விஷயம் அனைவரும் அறிந்தது. இது தமிழ் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தையும், தமிழ்மொழி வளர்ச்சியையும் தடை செய்வதாகும் என நம் நாயக்கர் கருதினார். திரு. எஸ். சோமசுந்தர பாரதியார், சுவாமி வேதாசலம் போன்ற பேரறிஞர்களது கருத்தும் இவரது அபிப்பிராயத்துக்கு அரண் செய்வதாக இருந்தது. ஆகவே, கட்டாய இந்தியை எதிர்த்து அவர் கிளர்ச்சி செய்யலானார். இக் கிளர்ச்சி தமிழ் நாட்டை வெகு வேகமாகப் பற்றியது. ஆடவர்களேயல்லாது பெண்களும் இக் கிளர்ச்சியில் கலந்து கொண்டனர். பலதிறப்பட்ட கருத்துடையவர்களும் இவ்விஷயத்தில் பெரியாருடன் ஒன்று கூடினர். இவ்வெதிர்ப்புக் கிளர்ச்சி மறியலாகப் பரிணமித்தது. பெரியாருக்கு இம்முறை பிடித்தமில்லாவிடினும், பள்ளியில் மறியல் செய்வதைத் தடுக்கவில்லை. இம் மறியல் காரணமாக 1001 பேர் சிறை சென்றனர். கடைசியாக இக் கிளர்ச்சி சம்பந்தமாக அவரும் தமது அறு

பதாவது வயதில் இரண்டரை வருஷம் சிறைவாசத் தண்டனை பெற்ருர். இது தமிழர்களுக்கு மகத்தான வருத்தத்தை யளித்தது. அவரை விடுதலை செய்யும்படி தமிழ் நாடெங்கணும் கிளர்ச்சிசெய்யப்பட்டது. சட்டசபையிலும் கேள்வி மேல் கேள்வி கேட்கப்பட்டது. கடைசியாக, அவர் உடல் நலமின்மை காரணமாக 22-5-39-ல் விடுதலை செய்யப் பட்டார். அவரது விடுதலையை யொட்டியே, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி அடங்கி விட்டது என்று காரணங் கூறிச் சர்க்கார், மற்ற கைதிகளையும் ஏககாலத்தில் விடுதலை செய்துவிட்டனர். ஆயினும், உண்மையில் கிளர்ச்சி யடங்கவில்லை. மீண்டும் போர் தீவிரமாகத் தொடங்கப் போவது நிச்சயம். ஆகவே, பிரதம மந்திரி ஸி. இராஜகோபாலாச்சாரியார் பதினொன்ருவது சர்வாதிகாரியா யிருக்கும் திருவாட்டி திரிபுராம்பாளுக்கு 11-6-39-ல் எழுதிய கடிதத்தில், இந்தி பாடத்தில் கட்டாயமில்லை என எழுதியதோடு அமையாது, கட்டாயம் என்ற சொல்லை எடுத்து விட்டு, இஷ்ட பாடம் என்று தெரிவித்து விடுவாராளுல், நம் பெரியார் தாம் தொடங்கிய கிளர்ச்சியை அக்கணமே விட்டுவிடுவார் என்பது திண்ணம்.

மொழிக்காகக் கிளர்ச்சி யேற்பட்டதையோ, மொழிக்காக உரிமைப் போர் நடந்ததையோ இதுவரை நாம் கேட்டதில்லை. மொழி காரணமாக ஏற்பட்ட போராட்டத்தில் ஆண்களும் பெண்களுமாக 1001 பேர் சிறை புகுந்த அதிசயத்தை உலக சரித்திரத்தில் கூட நாம் படித்ததில்லை. இத்தகைய அதிசயத்தை நடத்திக் காட்டிய இராமசாமி நாயக்கரைப் பெரியா ரென்ளுது, தனித் தமிழ்ப் பெரியார், தமிழ் நாட்டுத் தனிப்பெருந் தலைவர் என்ளுது வேறு யாரைக் கூறுவது!

பெரியார் வாழ்க! தமிழ் வாழ்க!!

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக !!!

ஸ்ரீ லலிதா பிரஸ், ஆனெகெவுனி, மதராஸ். (19396-V)